
சிவமயம்
பங்குனி
மாத இதழ்
மலர்
8
8/4/2003
அருள் ஒளி
வெளியீடு
துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
2003

உ

# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்

செஞ்சொற்செல்வர்

திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்

சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்

2003 சித்திரபானு வருடம் பங்குனி மாதம்

மலர் 8

வெளியீடு :

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,

தெல்லிப்பழை, இலங்கை.



## திருக்கோவில்களிற் திருவீதிகளைப் புனிதமாக்குவோம்

பங்குனி மாத உற்சவங்களைத் தொடர்ந்து ஈழநாட்டிலே உள்ள சைவ ஆலயங்கள் அனைத்திலும் மகோற்சவம் ஆரம்பமாகி நடைபெற உள்ளது. கோயில்களில் விழாக்கள் பட்ச விழாக்களாகவும், நட்சத்திரத்தை அந்தமாகக் கொண்டும் திருவிழாக்கள் நடைபெற்று வரும் வழக்கம் உண்டு. திருக்கோயில்களில் செய்யத்தக்கவை எவை? செய்யத்தகாதவை எவை? என ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் முதல் இன்று வரையுள்ள சைவப்பெரியார்கள் வரை எமக்கெல்லாம் அறிவுறுத்தி வந்துள்ளார்கள்.

சைவத் திருக்கோயில்களில் மிகவும் முக்கியமான இடத்தை வகிப்பது திருவீதிகள் ஆகும். திருவீதிகள் சிறப்புப் பெறுதல் வேண்டும். பெரிய கோயில்களில் மூன்று வீதிகளும் சாதாரணமாக அனைத்துக் கோயில்களிலும் சுவாமிகள் திருவீதிவர இரண்டு திருவீதிகளுமே காணப்படுகின்றது ஆலயங்களில் திருவலகிடுதல், திருமெழுக்கு இடுதல், திருநந்தவனம் அமைத்தல், பூமாலை கட்டுதல், தூப தீபம் இடுதல், திருவிளக்குகள் ஏற்றுதல், திருமுறை பாடல், பூசைக்குரிய திரவியங்களை வழங்குதல் என்பன பெருமைக்குரிய திருத்தொண்டுகளாக கரு

தப்படுகின்றது. மேலும் அப்பர் சுவாமிகள் பாடிய ''நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா'' என்னும் தேவாரத் திருப்பதிகத்தி னால் சரியைத் தொண்டின் சிறப்பு அறியமுடிகின்றது.

இவற்றுள் எல்லாம் தலையாய திருத்தொண்டாக காணப்படுவது திருவலகிடுதல் ஆகும். கோயிலுக்கு செல்லும்போது அங்குள்ள துடைப் பங்களால் வீதிகளைத் துப்பரவு செய்தல் வேண்டும். திருவீதிகளி லுள்ள புற்கள், பூண்டுகள், பற்றைகளை எல்லாம் உழவாரம் மண் வெட்டி கொண்டு துப்பரவு செய்து அகற்றிவிடுதல் நன்று. மேலும் விமானங்கள், கோபுரங்களில் காணப்படுகின்ற ஆல், அரசு போன்ற மரங்களை சிறுகருவிகள் கொண்டு அகற்றிவிடுதல் சாலச்சிறந்தது.

திருக்கோயில் திருவீதிகளில் சுவாமி மூர்த்தங்கள் திருவீதி உலா வரும் காட்சி மகத்துவமானது கோயிலின் உள்ளே சென்று சுவாமி தரிசனம் செய்ய இயலாதவர்களுக்கும் வெளிவீதியிலே உலாவந்து அடியார்களுக்கு காட்சி தருகின்றார் இறைவன். இத்தகைய திருவீதிக ளின் புனிதத்தன்மைக்கு துப்பரவு மிகவும் அத்தியாவசியமானது. உழவர் பெருமக்கள் கூறும் ''ஒப்புரவு'' என்ற சொல்லுக்கு அமைவாக திரு வீதிகளில் ஒப்புரவு காணப்படுதல் வேண்டும்.

திருவீதிகளின் புனிதத்தன்மை அடியார்கள் வீதிவலம் வரும்போதும் அங்கப்பிரதட்சிணம் செய்யும் போதும் ஆனந்தம்பெற வழியமைக்கும்.

திருவீதிகளில் உள்ள புல், பூண்டுகளை அகற்றிய முதற்தொண்டர் திருநாவுக்கரசு சுவாமிகள், அப்பர் சுவாமிகள் உழவாரப் படையாளி யாக அன்று காணப்பட்டார். இதே போன்று சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்களும் கந்தவனக்கடவை முருகன் ஆலயம் தொடக் கம் திருக்கேதீஸ்வர ஆலயம்வரை திருவீதித்தொண்டு செய்து, 'திருப்பணி அப்பர்' எனப் பெருமை பெற்றார்கள்.

இன்று திருக்கோயில்களின் சிறப்புகள், திருவீதிச் சிறப்புப்பெற ஆலய பரிபாலகர்கள் பாராமுகமாக இருப்பது வருத்தம் தருகிறது. சுவாமி திருவீதி உலாவரும் திருவீதிகள் மகோற்சவ காலங்களிலா வது கவனித்து புனிதம் பேணி விழாக்களை நடத்துவோமாக. திருக் கோயில் திருவீதிகள் புனிதம்பெற அமைவது சைவப்பெருமக்களின் பெருங்கடன் அன்றோ!

**ஆசிரியர்**

# சைவ ஆசாரங்களும் சிராத்தமும்

திரு. குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

சைவ அநுட்டானங்கள், ஆசாரங்கள் என்பன நம் முன்னோர்களால் வகுக்கப்பட்டும், கடைப்பிடிக்கப்பட்டும், வழிவழியாக உணர்த்தப்பெற்றும் வந்தவை. இவை வாழ்க்கையோடு இணைந்து விட்டவை. வாழ்க்கைக் கடமைகளாகக் கைக்கொள்ளப்பட்டு, பல நூற்றாண்டுக்காலம், மக்களின் வாழ்க்கையை வளம்படுத்தி வந்துள்ளன. மனித வாழ்க்கை என்பது உண்டி, உடை, உறையுள் ஆகிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்படுவதில்லை. அதற்கப்பாலும், ஆத்மீகம், பண்பாடு, கலை, கலாசாரம், அறிவியல், தொழில்நுட்பம்எனப் பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கியதாகவே மனித வாழ்க்கை மிளிர்கிறது. மனிதர்கள் இவ்வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கும், வளமாக வாழ்வதற்கும் இவையனைத்தின் ஒன்றிணைந்த ஆற்றல் தேவை. இவற்றில் ஒன்று குறைந்தாலும், மனித வாழ்க்கை சத்து அற்றதாகவும் சக்தி இழந்ததாகவும், ஆகிவிடுகின்றது. இதனாலேயே, சைவசமயம், உலகியலையும் ஆத்மீகத்தையும் ஒருங்கே வலியுறுத்துகின்றது. இல்லறம், துறவறம் ஆகிய இரண்டையுமே அறங்களாக ஏற்றுக்கொள்கின்றது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வானுறையும் தெய்வநிலையை மனிதர்கள் அடையப் பெறுவதற்கு வழியாகச் சைவ நெறி விளங்குகின்றது. நமது சமயத்தில், சமயமும் மெய்யறிவும் ஒன்று சேர்ந்துள்ளன. சமய அநுட்டானங்கள் சமய ஆசாரங்கள் ஆகியவற்றிற்குப் பின்னால் அறிவு பூர்வமான தத்துவங்கள் உள்ளன. சமூக உயர்வு, சமூக உறுதி, சமூகக்கட்டுக்கோப்பு, சமூகசமநிலை ஆகியவற்றை வளர்க்கவும், பேணவும் காலங்காலமாக உதவி வந்துள்ளன. பல்வேறு இடர்ப்பாடுகளையும் வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்கள் துயர்களையும் பயம், பீதி, குழப்பங்கள் அழிவுகள் என்பனவற்றையும் துணிச்சலுடன் எதிர்கொண்டு, அவற்றிலிருந்து மீண்டு: சாந்தி, சமாதானம் அமைதி பெற்றுநல்வாழ்வு வாழ்வதற்கு வேண்டிய பலத்தையும், பண்பையும், ஆற்றலையும் ஆதாரத்தையும் சமய ஆசாரங்கள் மனித குலத்திற்குக் கொடுத்துத் துணைசெய்து வந்துள்ளன. அவை மூடப்பழக்கவழக்கங்கள் என்றால், என்றோ மறைந்திருக்கவேண்டும். பயனற்றவை தொடர்ந்து இடம் பெற்று வரமுடியாது. எனவே அவை பண்பும் பயனும் நிறைந்தவை.

அர்த்தமுள்ள, பயன் நிறைந்த சைவ ஆசாரங்களும் அநுட்டானங்

களும் தற்காலங்களில் கைவிடப்பட்டும், நையாண்டி செய்யப்பட்டும் வருதல், நன்மைக்கு இட்டுச்செல்கின்றன என்று கூறுவதற்கில்லை, மாறாக மனிதகுல நாசத்திற்கே இதுவழிவகுக்கின்றது என்பது மக்களால் உணரப்பட வேண்டியது. இன்று மனிதகுலம் எதிர்நோக்குகின்ற அவலங்கள், துன்பங்கள், அல்லல்கள், தொல்லைகள் அழிவுகள் ஆகியவை, தற்கால மனிதர்கள் ஆண்டாண்டு காலமாகப் பேணப்பட்டு வந்த மனிதப்பண்புகள் விழுமியங்கள், சமய ஆசாரங்கள், சமய நெறிகள், ஆத்மீக செயற்பாடுகள் ஆகியவற்றின் பெறுமானத்தைக் குறைத்து மதித்து, அவற்றை மூடநம்பிக்கைகள் என விலக்கி வைத்ததன் விளைவேயாகும். தினை விதைத்தவன் தினையைத் தானே அறுவடை செய்யமுடியும். தினையை விதைத்துவிட்டு நெல்விளையும் என எதிர்பார்ப்பது எத்துணை பேதமையோ, அதைவிடப் பன்மடங்கு பேதமை சமயச் செயற்பாடுகள், ஆத்மீகச் சிந்தனைகள், மனித விழுமியங்கள், நல்லொழுக்கப்பண்புகள் ஆகியவற்றை மனித வாழ்க்கையினின்றும் பிரித்து வெளியேற்றி விட்டு அமைதி வாழ்க்கை, சாந்தி, சமாதானம், நீதி, நியாயங்கள் ஆகியவற்றை வாழ்வில் எதிர்பார்ப்பது ஆகும்.

நல்ல வாழ்க்கை நெறிகளை சமயத்தோடு தொடர்புபடுத்தி மக்களிடையே பரப்புவது, அதனால் சமூக வாழ்க்கையை மேம்படுத்துவது என்பது சைவ சமய உத்தியாகப் பயன்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் சமயச் செயற்பாடுகள், ஆசாரங்கள், சடங்குகள், கிரியைகள், விழாக்கள், விரதங்கள் என்பன நிகழ்த்தப்பட்டு வந்தன. இவற்றிற்கு விதிகள், பிரமாணங்கள், முறைகள் ஆகியனவும் வகுக்கப்பட்டன. இவற்றினால் மனிதர்கள் அகப் புறத் தூய்மையராய், உலக ஈடேற்றமும் ஆன்ம ஈடேற்றமும் பெற்று உய்ந்தனர். அருஞ் செல்வங்களையும் காட்டிய வழிமுறைகளையும் அலட்சியம் செய்வது அறிவு ஆகாது. மடமையின் அதி உச்சம் எனலாம். அன்பும் அறனும் இணைந்து காணப்படும் மனித வாழ்க்கையே இன்பம் கொழிக்கும் வாழ்க்கை. இதுவே சமய வாழ்க்கையும் ஆகும். அன்பையும், அறனையும், மனிதனிடம் சேர்த்து வைப்பது சமயநெறிகள் சமய ஆசாரங்கள், அனுட்டானங்கள் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுதல் அவசியம். இவையனைத்தும் எமது சமயப் பண்பாட்டுக் கூறுகள். இத்தகைய சைவசமயப் பண்பாடுகள் பல இன்றைய சந்ததியினரால் மறக்கப்பட்டும், மறுக்கப்பட்டும், மறைக்கப்பட்டும் மற்றையோர் பின்பற்றாது மறிக்கப்பட்டும் வருவது விசனிக்கத்தக்கது. இதனைவிட இவற்றை மேற்கொள்ளும் சிலர் மனம் போன போக்கிலே, இவற்றின் விதிமுறைகளையும் தாற்பரியத்தையும் கருத்திற் கொள்ளாது, நவநாகரிகத்திற்கேற்ப சமய, பண்பாடுகளைத் திரித்தும், புதுக்கியும், பிற பண்பாடுகளிலிருந்து சேர்த்தும், அடிதலை மாற்றி, தம் வசதிகளுக்கு முன்னுரிமை கொடுத்துசெயல் படுவது கவலைக்குரியதாக உள்ளது. இவர்கள் குளிக்கப்போய் சேறு பூசியவர்கள் ஆகின்றனர். மேலும் இவையனைத்தும் கண்டும் காணாதவர்களாக வாழாவிருக்கும் சிலரும் கண்டு

அவற்றை ஏற்றுக்கொள்ளும் சிலரும் பிழையென்று தெரிந்தும் நியாயப் படுத்துபவர்களும் வழிகாட்டவேண்டிய அறிஞர்கள் மத்தியில் காணப் படுவது மேலும் விசனத்தைத் தருகின்றது. வழி வழி வந்த பண்பாடுகளையும், நடைமுறைகளையும் கற்றுப், பேணி அடுத்த தலைமுறையினருக்குக் கையளிக்க வேண்டிய பொறுப்பு அறிஞர்கள், பெரியோர்களுடையது என்பது கருத்தில் கொள்ளப்படவேண்டியது.

நமது சமுதாயம் சமயப் பண்பாடுகளை அடியொற்றியே வளர்ந்து வருகின்றது. இதனை மாற்றியமைக்க வேண்டிய தேவையுமில்லை. அது எளிதான காரியமுமல்ல. சமய ஆசாரங்களும் அநுட்டானங்களும் வாழ்க்கையை வளம்படுத்துவன: சீர்குலைப்பன அல்ல; வாழ்வில் பிடிப்பினையும் நம்பிக்கை உணர்வையும் ஏற்படுத்துவன: ஒற்றுமையையும் உறுதியையும் நல்குவன. வேற்றுமையையும் வேண்டாதனவற்றையும் களைவன. மனிதர்களுக்கு மனிதத்தன்மையையும், தெய்வீகத்தன்மையையும் தருவன: அவர்களுள் ஆழ்ந்து கிடக்கும் நல்லனவற்றையெல்லாம்வெளிக் கொணர உதவுவன. அவை மறைந்து போகவிடாமல் காப்பாற்றப்படவேண்டும். இந்த உலகம், மனிதர்கள் வாழத் தகுந்த இடமாக உருவாக்கப்படுவதற்கு சமயப்பண்பாடுகள் பேணப்பட வேண்டியது அவசியமாகின்றது.

இந்த வகையில் சைவசமய ஆசாரங்களில் ஒன்றான சிராத்தம் பற்றி நோக்குவோம். சிராத்தம் என்பது தந்தை தாயார் இறந்த பின் ஆண்டு தோறும் அவர்களின் தீவினைகள் நீக்குதற் பொருட்டும், அவர்களின் ஆத்ம சாந்திக்காகவும், அவர்களை நினைந்து சிரத்தையுடன் புத்திரர்களால் நிறைவேற்றப்படும் தான தருமங்கள் ஆகும்.

''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்பதுஆன்றோர்வாக்கு. எனவே தந்தை தாய் ஆகிய இருமுதுகுரவரும் கண்கண்ட தெய்வங்களாக அவர்கள் உயிரோடு வாழுங்காலத்து அன்போடு அவர்களைப் பேணி, அவர்களின் தேவைகளை விருப்போடு நிறைவேற்றி அவர்களின் சொல்வழி நின்று நல்வழியில் ஓம்புதல் தான் அவர்களை வழிபடுதல் என்பது ஆகும். அவர்கள் இறந்த பின் அவர்களின் ஆத்மா சிவபதம் அடைவதற்கு ஏதுவாக, புத்திரர்களால் சிரத்தையோடு செய்யப்படுகின்ற கிரியைகள் அபரக் கிரியைகள் எனப்படுகின்றன. அபரம் என்பதன் பொருள் பிந்தியது ஆகும். இவ்வாறு இறந்த தாய் தந்தையரைக் குறித்து அபரக்கிரியைகளை முறைப்படி செய்து வழிபாடு செய்தல் புதல்வர்களின் கடன் ஆகக்கொள்ளப்படுகின்றது. தென்புலத்தார் வழிபாடு என்றும் பிதுர் வழிபாடு என்றும் இதனை நம்முன்னோர் குறிப்பிடுகின்றனர். சைவத்தமிழ் மக்களிடையே மிகப்பழைய காலந்தொட்டு இத்தகைய வழிபாட்டு முறை இருந்து வந்தமைக்குச் சான்றுகள் உண்டு.

''தென்புலத்தார்தெய்வம் விருந்தொக்கல்
தானென்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல்தலை''

என்பது வள்ளுவர் வாய்மொழி

தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐந்து வகையினரும் இல்வாழ்வானால் ஓம்

பப்பட வேண்டியவர்கள் என்பது பழந்தமிழர் கொள்கை. தென்புலத்தார் என்பது பிதுர்கள் - இறந்த ஆத்மாக்கள். இவை பூமண்டலத்திற்குத் தென்திசையில் உள்ள தென்புலத்தில் உறைவதால், பிதுர்கள், தென்புலத்தார் எனப்படுகின்றனர் திருவள்ளுவர் தென்புலத்தாரை முதன்மைப்படுத்துவதால், தென்புலத்தார் வழிபாட்டிற்குத் தமிழ் மக்கள் கொடுத்து வந்த முக்கியத்துவம் புலப்படுகிறது.

தந்தை தாயரைச் சிரத்தையுடன் சிந்தித்து, அவர்கள் நற்கதியடைய வேண்டுமென்று சிரத்தையுடன் அவர்களைக் குறித்து, அவர்கள் இறந்த பின் குறித்த காலவேளைகளில் புத்திரர்களால் செய்யப்படுகின்ற கருமங்கள், தானதருமங்கள் என்பன சிராத்தம் எனப்படும். சிரத்தையோடு செய்யப்படுவது சிராத்தம். அப்பொழுதுதான் பலன் உண்டு. சிரத்தையின்றி, ஊர் ஒப்புதலுக்காக அல்லது மனத்தை வேறு இடங்களில் அலைய விட்டுச் செய்யப்படுவது சிராத்தம் ஆகாது.

ஆண்டுதோறும் இறந்த மாதமும் திதியும் சேர்ந்த நன்நாளில் சிராத்தம் செய்யப்பட வேண்டும். திவசம் திதி என்றும் சிராத்தம் அழைக்கப்படுகிறது. இத்தினத்தில் இறந்த தந்தை தாயரை நினைந்து சிரத்தையோடு ஓமாதிகள் செய்தும், பிண்டதானம், தர்ப்பணம் ஆகியவற்றைச் செய்தும் வழிபட்டு, சற்பாத்திரப் பிராமணர்களுக்குப் போசனம் முதலிய தானங்களைக் கொடுப்பது சிராத்தமாகும். இத்தினத்தில் வறியவர்கள், சுற்றத்தவர்கள் ஆதரவற்றவர்களுக்கு அன்னம், வஸ்திரம் முதலியபொருள்களை அவரவர் இயல்புக்கேற்ப வழங்கும் வழக்கமும் இருந்துவருகிறது. சிராத்தம், தன்னுடைய வீட்டிலோ, திருக்கோயிலிலோ, தீர்த்தக் கரையிலோ செய்யலாம். செய்யப்படும் இடம் கோமயத்தினால் மெழுகிச் சுத்தம் செய்யப்படல் வேண்டும்.

சிராத்தமானது நித்திய சிராத்தம் முதலாகப் பலவகையாக உள்ளது. சிராத்த வகை தொண்ணூற்றாறு ஆகும். இத்தினங்களில் பிதிர்களுக்கு சிராத்த தருப்பணங்கள் செய்தல் முறையாகும். புண்ணிய காலங்களிலே பிதிர்களைக் குறித்துத் தருப்பணம் முதலியன செய்யப்படுவதால், அவை திருப்தியும் நற்கதியும் அடைகின்றன. நம்மையும் காத்தருளுகின்றன. இவையனைத்தையும் செய்ய முடியாவிட்டாலும், தந்தை தாயார், இறந்த மாதமும், திதியும் ஆண்டு தோறும் வரும் தினத்திலாவது சிராத்தம் செய்வது நன்று. நைமித்திய சிராத்தம் என்றும் ஆண்டுத்திவசம் அல்லது ஆண்டுத்திதி என்றும் அதனைக் கூறுவர். தாய் தந்தை என்போர் இறந்த மாதம், பட்சம், திதி ஆகியவை தெரிந்திராத நிலையில், தாயாருக்குச் சித்திரை மாதப்பூரணையிலும், தந்தைக்கு ஆடி அமாவாசையன்றும் சிராத்தம் செய்யும் வழக்கம் உள்ளது. மேலும், எந்த வம்சத்தில் பிறந்தோமோ அந்த வம்சத்தைச் சேர்ந்த எல்லாப் பிதுர்களும் இச் சிராத்தம் மூலம் பிரீதி செய்யப்படுகின்றன. வம்சம் தழைக்க மக்கட்பேறு வேண்டுமென்பது இங்கு கவனிக்கற்பாலது. சந்ததியைத் தொடர வைக்கப் பிள்ளைகள் இல்லாதவிடத்து, சிராத்தம் செய்ய உரித்தாளர் இல்லா

மல் போய்விடுவர். அதனால் தாய் தந்தைக்கு மட்டுமல்ல அவர்களுக்கு முந்திய பிதுர்களுக்கும் பிரீதிசெய்ய முடியாத நிலை ஏற்பட்டு விடுகின்றது. இவ்வாறு இருக்க, சந்ததியில் பிள்ளைகள் இருக்கும்போது தந்தைதாயாருக்கு திவசம் செய்யாது விடுதல் எத்துணை பிழையானது என்பது உய்த்துணர்தற்பாலது.

பிதுரர் குறித்து சிராத்தம், தர்ப்பணம் செய்யக்கூடிய புத்திரனையுடையவனே சுவர்க்கத்தை அடைவான் என்று மத்தியந்த முனிவர் தமது புத்திரராகிய வியாக்கிரபாத முனிவருக்குக் கூறியதாக உமாபதி சிவாசாரியர் கோயிற்புராணத்தில் குறிப்பிட்டுள்ளார்.

''புத்'' என்ற பெரு நரகத்திலிருந்து தந்தை, தாயர், பிதுர்கள் ஆகியோரை காப்பாற்றுபவன் என்பதினால் புத்திரன் என்று மகன் அழைக்கப்படுகிறான். சிராத்தம் செய்வதன் மூலம் இது சாத்தியமாகின்றது ஏமக்கடன், நீர்க்கடன், பிதுர்கடன் என்பன செய்தே தீரவேண்டியகருமங்கள் என்பதால் கடன் என்று கூறப்படுகின்றன. இவைதட்டிக்கழிக்கக் கூடியவையல்ல திருவள்ளுவப் பெருந்தகையும்

''எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட்பெறின்'' என்கிறார்.

எனவே, பிதுர்களுக்கு சிராத்தம் செய்பவர்கள் இம்மையில் பூரண ஆயுளையும், சகல சம்பத்துக்களையும், நற்சுகத்தையும், நன்மக்கட் பேற்றையும் தெய்வஅனுக்கிரகத்தையும் அடைவார்கள். எண்ணியவை எண்ணியாங்கு எய்தப்பெறுவர். பிதுர்கள் காவல் தெய்வங்கள், அகாலமரணங்கள், விபத்துக்கள், வறுமை, கொடியநோய்கள் என்பன அணுகாமல் எம்மைச் சதா நேரமும் காவல் காத்து வருபவை தென்புலத்தெய்வங்கள். மேலும், பெற்றோர் பிள்ளைகள் பாசம், பிணைப்பு என்பன ஏற்படவும், காலமான பெற்றோர்களுக்கு அன்புக் காணிக்கையைச் செலுத்தவும் இத்தகைய பிதுர் வழிபாடு உதவுகின்றது. இதனைப் பார்த்துக் கொண்டிருக்கும் பிள்ளைகளும் தாமும் தம் பெற்றோர்களுக்கு இவ்வாறு வழிபாடுகளை ஒரு காலத்தில் செய்யவேண்டும் என்ற உணர்வைப் பெறுகின்றனர்.

பிதுர்களுக்கு ஒரு நாள் எம்முடைய ஒரு வருடகாலத்திற்குச் சமமானது. சிராத்தம் செய்வதன் மூலம் அவர்களுக்குத் தினம் உணவு கொடுப்பது போன்று ஆகிவிடுகின்றது. எள்ளும் தண்ணீரும் இறைத்தல், தர்ப்பணம் செய்தல் மூலம் பிதுர்களுக்கு தாகம் தணிக்க தண்ணீர் வழங்குவது போன்று ஆகிவிடுகின்றது.

மாளய சிராத்தமும் பிதுர்களின் பொருட்டுச் செய்யப்பட வேண்டியது புரட்டாதி மாதத்துக் கிருஷ்ண பக்கப் பிரதமைத்திதியிலிருந்து அமாவாசை வரை உள்ள தினங்கள் மகாளய தினங்கள்எனப்படுகின்றன. இத்தினங்களில் பிதுர் தேவதைகள் தென்புலத்திலிருந்து பெயர்ந்து வந்து தத்தம் குடும்பத்தினருடன் தங்குவதாகநம்பிக்கை இருந்துவருகின்றது. மகா + காலம் என்பது எல்லாப் பிதுர்களும் ஒன்று கூடுதல் என்ற பொருள் ஆகும். எனவே மாளய சிராத்தம் சிறப்பாகக் கொள்ளப்படுகின்றது. ஆண்டுத் திதியில் சிராத்தம் செய்

யாதவர்கள் கூட மாளய சிராத்தத்தை விடாது செய்வதைப் பார்க்கின்றோம். மாளய சிராத்தம் பிதிர்களுக்கு இரவு போசனம் கொடுப்பது போன்று அமைகின்றது.

பண்டைய தமிழ்மக்கள் இறந்தவர்களைப் பெரிய தாழியில் வைத்து நிலத்தின் குண்டுக்கற்களை அவற்றிற்கு எவ்வித உறுப்புக்களும் கற்பிக்காது, தெய்வமாகவழிபட்டனர் எனக் கூறப்படுகின்றது. குண்டுக்கல் வழிபாடு இருந்த காலத்தில், பிண்டத்தைச் சமாதியில் வைத்து வழிபாடு செய்தனர். இதனைப் பிண்ட தானம் என்னும் கிரியையுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

சைவ நெறிப்படி இல்வாழ்வான் என்பான் ஐந்து பெரும் வேள்விகளைச் செய்யவேண்டியுள்ளது. பஞ்ச மகாயக்ஞம், என நூல்கள் கூறுகின்றன. பிரம்மயகஞம் தேவயக்ஞம், பிதிர்யக்ஞம், பூதயக்ஞம், மனித யக்ஞம் என்பனவே இவ்வைந்தும் ஆகும். பிரமயக்ஞம் என்பது வேதமோதுதல் இதன்மூலம் முனிவர்கள் மகிழ்கின்றனர். தேவயக்ஞம் என்பது அக்கினி வளர்த்து ஓமஞ் செய்தல், இதனால் தேவர்கள் திருப்தியடைகின்றனர். பிதிர்யக்ஞம் என்பது பிதிர் சிராத்தம் தருப்பணம் ஆகியவற்றைக் குறிக்கின்றது. இதனால் பிதிர்கள் திருப்தியாகின்றனர். பூதயக்ஞம் மூலம் பசு, காக்கை முதலியவைகளுக்கு உணவளித்தல், மனிதயக்ஞம் என்பது விருந்தினர், சுற்றத்தார், ஏழைகள், துறவிகள் என்போர்க்கு உணவளித்து உபசரித்தல், இவற்றுள் தென்புலத்தார் வழிபாடு ஆக பிதிர்யக்ஞம் பழந்தமிழ் மக்களால் கொள்ளப்பட்டது என்பது திருக்குறள், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் முதலிய நூல்களிலிருந்து அறிய முடிகின்றது. இறந்தோர்க்கு நடுகல் நட்டு வழிபடுதல் பண்டைத்தமிழர் முறை இம்முறை இன்றும் கருமாதியிற் காணப்படுகின்றது. எள்ளின் பிறப்பிடம் தமிழ்நாடு. எள்ளும் தண்ணீரும் பிதுர் வழிபாட்டில் பயன்படுத்தும்பிண்டதானம்செய்வதும் பழங்காலத்திலிருந்து நடைமுறையில் இருந்து வருகிறது.

தெய்வ வழிபாட்டைப் பக்தியுடனும், பிதுர் வழிபாட்டைச் சிரத்தையுடனும் செய்துவரவேண்டும். என்று கூறுவர். எனினும் இரண்டிற்குமே பக்தி சிரத்தை இரண்டும் தேவை என்பதை மறுப்பதற்கில்லை. சிராத்தம் முதலிய பிதுர் காரியங்களை நாங்கள் செய்வது பிதுர்களை திருப்திப்படுத்துவதோடு, அவர்களின் நற்கதிக்கு வழி செய்வதுடன், நம்முடைய நன்மைக்கும் மனத்திருப்திக்காகவும் தான் என்பதை மனதில் நிறுத்திப் பிதுர்க் கடன்களை நிறைவேற்றி உய்வு பெற்று வாழ்வோமாக.

★ ★ ★

## புத்தகங்கள்

புத்தகங்கள் மனிதர்களல்ல; இருந்தும் அவை உயிரோடுள்ளன; அவை மனித ஞாபகார்த்தங்கள் அவனுடைய முன்னேற்ற விருப்பங்கள்; நிகழ்காலத்திற்கும், எதிர்காலத்திற்கும் உள்ள தொடர்பு; அவன் உபயோகப்படுத்தும் ஆயுதங்கள்.

— ஸ்டீபன்லின் செண்ட்பெனட்

உ

# பங்குனி உத்தரப் பெருவிழா

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P. அவர்கள்

"மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி உத்தரநாள்
ஒலி விழாக் காணாதே போதியோ பூம்பாவாய்."

சைவ வாழ்வுக்கு அத்திவாரமானது கோயில் வழிபாடு. கடவுளைக் கண்ணுக்கினிய பொருளாகக் கொண்டு திருக்கோலத் திருமேனி அமைத்து வழிபட்டு வருவது எமது சமயத்தின் இன்றியமையாத கடமையாகும். கோயிலில் நடைபெறும் பூசையும், வழிபாட்டுக் கிரியைகளும், விழாக்களும் காரணகாரிய ரீதியில் அமைந்தவை. எம்முடைய சிந்தனையைக் கருத்தைப் புலப்படுத்த, மற்றவர்களுக்கு உணர்த்த, எம்முடைய உணர்வை நிலைநிறுத்திக் கொள்ளச் சின்னங்கள், கிரியைகள், விழாக்கள் பெரிதும் துணை செய்கின்றன. இத்தகைய விழாக்களுள் முதன்மையானது பங்குனி உத்தரப் பெருவிழாவாகும். மங்கலத் தன்மையை நிரம்ப உடையவனான சிவனுக்குக் காரணகாரிய ரீதியாக அமைந்த பெயரே சிவனாகும். "குறைவிலா மங்கலக் குணத்தன் ஆதலின் — அறைகுவர் சிவன் என அறிவின் மேலவர்" என்ற காஞ்சிப் புராண வரிகள் இதனை உணர்த்தும். இத்தகைய மங்கலமுடைய எம்பிரானுக்கு எல்லா நாட்களும் விழா நாட்களே. எனினும் சில விழாக்கள் மிகவும் சிறப்புடையன. இவற்றுள் ஒன்றாக விளங்குவதே இறைவனது திருக்கல்யாண விழாவாகும். இது இறைவன் உலகத்தார்க்கு இம்மை நலன்களை இனிது வழங்குவதற் பொருட்டே நடாத்தப் பெறுவதாகும். திருக்கல்யாண விழா இறைவனின் போக வடிவைக் குறிப்பதாகும். ஆன்மாக்களுக்கு இறைவன் திருவருளாலேயே உலக இன்பமுங் கிடைக்கிறது என்பதைக் காட்ட மணவாளக் கோலத்துடன் காட்சியளிக்கும் விழா இதுவாகும். அவனிடத்துப் பெண்ணுருவாகக் காட்சி கொடுப்பது திருவருளேயன்றி வேறில்லை. மக்கள் நலனுக்குத் திருமண முறை எவ்வளவு இன்றியமையாதது என்பதைக் காட்ட தானே திருமணக் கோலங் காட்டி விளங்குகிறான் பெருமான். இறைவன் திருவருளாலேயே உலக இன்பமும் உயிர்களுக்குக் கிடைக்கின்றது என்பதற்காகவே மணவாளனாகவும், மக்களை உடையவனாகவும் காட்டப்படுகின்றான். இதனை மணிவாசகப் பெருமான்

"தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பாலியோகெய்தி விடுவார்கண் சாழலோ"

போகத்திற்காகவே உயிர்கள் பல காணப்படுகின்றன. அதனால் இறைவன் அவைகளுக்கு அருள்புரிதற் பொருட்டுத் தானும் போகவடிவினனாய் விளங்குகின்றான். இறைவன் போக வடிவினனாய் இல்லையென்றால் போகத்திற்குரிய உயிர்கள் அதனைப் பெறமாட்டாது என்பதனை மணிவாசகப் பெருமான் மேற்காட்டிய பாடலில் அழகாக விளக்குகின்றார்.

மக்கள் நலத்திற்கு இவ்வகை மணமுறை இன்றியமையாதது என இறைவனே வகுத்துக்காட்டி அதனை நிலைபெறுதற்கு அவனே அதனைச் செய்து காட்டியும் எம்மை வழிப்படுத்துகிறான். அதனால் பிறர் போலத் தானும் திருமணக் கோலம் கொண்டருள்கின்றார். இதனாலேயே இறைவனது திருவிழா நாட்களில் திருக்கல்யாண விழா மிகவும் சிறப்புடையதாகப் போற்றப்படுகின்றது.

இத் திருமண விழா சிவபெருமான் உமாதேவியார் மலையரசன் மகளாக வளர்ந்த போது தேவர்கள், சிவகணங்கள் சூழ திருமணம் செய்து கொண்டதையே குறிக்கிறது. இதனைக் கந்தபுராணத்தில் நாம் விரிவாகக் காணலாம். இப்புராணத்திலேயே ‘பங்குனி மாதத்து உத்தர நட்சத்திரத்தன்று’ இத் திருமணம் நடைபெற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பங்குனி மாதப் பூரணையோடு கூடிய உத்தர நாளாகிய பங்குனி உத்தரமே சிவபிரானது திருமண விழா நிகழ்ச்சிக்குச் சிறப்பான நாளாகக் கொள்ளப்படுகிறது. சிவன் ஆலயங்களில் பங்குனி உத்தரத்தை முதன்மையாகக் கொண்டு பெருவிழாக்கள் நடைபெறும். இவற்றுள் திருவாரூர், காஞ்சி, மயிலாப்பூர் போன்றன சிறப்பு மிக்க தலங்களாகும்.

“மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னும் அது என்னேடி?
உலகறியத் தீவளோ தொழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெல்லாம் கலங்கிடுங்காண் சாழலோ”

என்ற திருவாசகப் பாடலை ஓதி பங்குனி உத்தரப் பெருவிழாவை நாமும் கண்டு இன்புறுவோமாக.

★ ★ ★

## திருவருள்

முத்திரையின் புறத்திலே ஒரு பசை இருக்கிறது. அந்தப் பசை முத்திரையைக் கடித உறையில் ஒட்டச் செய்து விடுகிறது. முத்திரை கடித உறையில் ஒட்டி ஒன்றாய் விடுகிறது. ஒட்டச்செய்த பசை மறைந்து விடுகிறது பிறகு முத்திரை வேறு, கடித உறை வேறு என்ற உணர்ச்சி இல்லாமற் போய் விடுகின்றது. பசை கடித உறையாய் மறைந்து, முத்திரையும் கடித உறையாகும்படி செய்து விட்டது.

அன்பு முத்திரையின் புறத்துப் பசைபோன்றது. சீவர்கள் முத்திரைகள் போன்றவைகள். திருவருள் கடித உறை போன்றது. சீவர்களாகிய முத்திரைகள் அன்பாகிய பசை கசிந்து கண்ணீர் மல்கித் திருவருளில் ஒட்டிக்கொள்ள வேண்டும். சீவர்கள் அன்பு கசிந்து திருவருளில் ஒட்டிக் கொள்ளுமானால் சீவர்கள் திருவருள் மயமாய்த் திருவருளுக்கு இடமான சிவமாய்விடும்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

௳

# பத்ததிகள்

சைவ சமய நூலாசிரியர்கள் சாத்திரம் எழுதிச் சமயத்தை வளர்த்த ஆசாரியர்களைக் கன்ம சித்தாந்தக் குரவர், ஞான சித்தாந்தக் குரவர், என இரு பிரிவினராக்கினர். இவர்களுள் கர்மநூல் செய்தவர்களைவிட ஞானநூல் செய்தவர்கள் பன்மடங்கு உயர்ந்தவர் என்பர். மெய்கண்டாரும் அவர் வழி வந்த சந்தான குரவரும் ஏனைய சந்தான பரம்பரை ஞான ஆசாரியாரும் ஞான நூல் செய்தனர். கர்ம சித்தாந்த குரவரில் பெரும் பான்மையினர் சிவாசாரியர்களே. இவர்கள் வடமொழியில் நூல் செய்தார்கள். தம் நூல்களில் இவர்கள் பொதுவாக ஞானத்தைப் பற்றிக் கூறியிருப்பினும் சிறப்பாகக் கிரியா பாகமாகிய கர்மகாண்ட சாத்திரங்களையே இயற்றியமையின் இவர்கள் கர்ம சித்தாந்த குரவர் எனப்பட்டனர். சிவாசாரியர்கள் பலர். இவர்கள் செய்த நூல்களும் பல. இந் நூல்களில் ஒருவகை பத்ததி என்பன. பத்ததிகள் சைவசமயத்தில் மட்டும் எழுந்துள்ளன.

பத்ததிகள் கிரியையைக் கூறுவதற்கென்றே எழுந்த நூல்கள். பத்ததி-நெறி, வழி, முறை இப் பத்ததிகள் 18 என்பர். ஆதியில் நந்திகேசுவரரிடம் உபதேசம் பெற்ற முனிவர் நால்வர். இவர்களுள் சனகர் புஷ்பகிரி மடத்தையும், சனாதனர் கோணகி மடத்தையும், சனந்தனர் ஆமண்டம் (அல்லது ரமண பத்திரம்) என்ற மடத்தையும் சனற்குமரர் ஆமர்த்தக மடத்தையும் தோற்றுவித்தனர். இவற்றால் பதினெண் சிவாசாரிய பரம்பரைகள் வளர்ந்தன. அப்பதினெண்மரும் 18 பத்ததிகள் செய்தனர். 15ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட திருவானைக்கா உலா 'பதினெண் மடத்து முதலிகளும்' என்று குறிப்பிடுகிறது.

இப் பதினெண் மடத்தாரும் சிவாசாரியர், தூர்வாசர், பிங்கனர் உக்கிரஜோதி சுபோதர் ஸ்ரீ கண்டர் விஷ்ணுகண்டர், வித்தியாகண்டர், ராமகாண்டர், ஞானசிவம், ஞானசங்கரர் சோமசம்பு, பிரம்மசம்பு, திரிகோணசிவம், (சம்பு) அகோரசிவம், பிரசாதசிவம், ராமநாதசிவம், ஈசானசிவம் வருணசிவம் என்பன இவர்கள் பெயர்கள். விஷ்ணு கண்டருக்கு நாராயண கண்டா என்றும் ஞான சிவத்துக்கு ஞான சம்பு என்றும் பெயர்கள் உண்டு இவர்களுள் துர்வாசர் பிங்கனர், சுபோதர், ஞானசங்கரர், பிரசாதசிவம், ராமநாதசிவம் சத்யோஜோதி, விபூதிகண்டர், நீலகண்டர், வைராக்கியசிவம் என்போரைச் சேர்த்துக் சைவ பூஷணம் என்ற நூல் கூறும்.

இவர்கள் அனைவரும் சம காலத்தவர் அல்லர். 18–15ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்கள் இவர்கள் ஒவ்வொருவரும் ஒரு பத்ததி செய்தார்கள்

இப்பத்ததிகள் ஆக்கியோரின் பெயராலேயே வழங்கும் சோமசம்பு பத்ததியானது கிரியா காண்டக்ரமாவளி என்றும் வழங்குகின்றது. 1860 சுலோகங்கள் கொண்டது. அகோர சிவாசாரியர் பத்ததி கிரியாக்கிரமத்யோதிகை என்றும் கிரியாக்கிரம பத்ததி என்றும் வழங்குகின்றது. இதன் மூன்றாம் பாகம் மட்டும் சைவசோடசப்பிரகாசிகை என்ற தனிப்பெயர் பெற்றுள்ளது. முதல் இரு பாகங்களுக்குப் பூர்வ அபர பாகங்கள் என்று பெயர். இரண்டும் மொத்தம் 279 சுலோகங் கொண்டவை. திருவாரூர் நிர்மலமணி தேசிகர் இவற்றுக்குப் பிரபை என்ற பெயருடைய வியாக்கியானம் ஒன்று எழுதியிருக்கிறார். அகோர சிவாசாரியாரை இவர் அபர பரமேசுவரன் என்றே குறிப்பிடுகிறார்.

இனி ஏனைய சிவாசாரியர் செய்த பத்ததிகளில் திரிலோசன சிவாசாரிய பத்ததி என்பது சித்தாந்த சாராவளியை அச்சிட்டோராலும் (1887) ஈசான சிவகுரு பத்ததி என்பது சோமசம்பு பத்ததியை அச்சிட்டோராலும் (1984) பல இடங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதுவன்றி அகோர சிவம் தமது உரைகளுள் பிரமசம்பு பத்ததி வருண பத்ததி ராம நாத பத்ததி என்பவற்றைப் பற்றிக் கூறுகின்றார். இப்பத்ததிகள் கிடைக்கவில்லை அவற்றுள் சில குறிப்புகள் மேற்கோளாக ஆளப்பட்டுள்ளன. அகோர சிவ பத்ததி வியாக்கியானத்தில் பின்வரும் நூல்களினின்றும் மேற்கோள்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. கிரியாக்கிரம மண்டன பத்ததி நடராஜ பத்ததி போஜ தேவ பத்ததி மிருகேந்திர பத்ததியும் அதன் வியாக்கியானமும், பட்ட சிவோத்தமர் செய்த வருண பத்ததியும் அதன் வியாக்கியானமும் என்பன. இந்நூலாசிரியர்களுள் போஜதேவர் என்பவர் தத்துவப் பிரகாசிகையைச் செய்தவர். இதற்கு அகோரசிவம் உரை எழுதியிருக்கிறார்.

பத்ததிகாரருள் தந்தை மகன் தொடர்பும் குருசீடர் தொடர்பும் உடையவர்கள் உளர். கேடகரின் புதல்வர் சத்தியஜோதி இவர் உக்ரஜோதியின் சீடர், சோமசம்பு இவர் கோளகி மடத்தலைவர். இவருடைய பெயர் ஞானசிவம்என்னும் ஞானசம்பு போஜதேவர் போஜராஜகுரு என்றும் சொல்லப்படுகிறார். இவர் உத்துங்க சிவாசாரியரின்சீடர். உத்துங்கர் தம் பெயரால் ஒரு பத்ததி செய்ததாகத் தெரிகிறது. சர்வசாதம் சம்புவின் சீடர் அகோர சிவாசாரியர்.

கிடைத்துள்ள பத்ததிகளில்சோமசம்பு பத்ததிதான் சைவசித்தாந்தம் என்றும் அகோர சிவத்தின் பத்ததி சில சமவாதக் கலப்புடையதென்றும் உரையாசிரியர்கள் கூறுகிறார்கள்.

இப்பத்ததிகள் யாவும் பதினெண் மடங்களில் எழுந்தவை. இதே காலத்தில் பின்னும் சில பத்ததிகளும் இயற்றப்பட்டன. சூரியனார் கோயிலாதீனத்தின் மூலஆசாரியர்களுள் ஒருவரான சதாசிவாசாரியர் (க. 1475) சதாசிவ பத்ததி செய்தார். அவ் ஆதீனத்துக்கும் சதாசிவ சந்தானம் என்று ஒரு பெயர் உண்டு. இவருக்குப்பின் மூன்றாம் தலைமுறையில் வந்தவர் சிவாக்கிர யோகிகள் (1564), அவர் கிரியா தீபிகை என்ற சிவாக்கிர பத்ததியும் செய்தவர். 1400ல் வாழ்ந்த காழிக்கண்ணனுடைய வள்ளல் தமது

வள்ளலாதீனத்து நூலாகக் குகபத்ததியைக் கொண்டார்! என்று அவர் வரலாறு கூறுகிறது. அதை இயற்றியவர் இன்னார்என விளங்கவில்லை.

இவையே அன்றி வெள்ளியம்பலவாணத் தம்பிரான் உரைகளில் சௌந்தரநாதாசாரியர்பத்ததி அவாந்தர சைவர் பத்ததி என இருநூல்கள் குறிப்பிடப்படுகின்றன. இவை சிவாசாரியர் பரம்பரைக்குரியன. மறைஞான தேசிகர் ஆன்மார்த்த பூஜாபத்ததி ஒன்று செய்தார் என்றும் இவர் கூறுகிறார். இதுவும் ஒரு வடமொழி நூலே. இத்தேசிகர் வேளாளர் சிவாசாரியர் அல்லர். இந்நூல் பிறபத்திகளைப் போலக் கிரியைப் பகுதி முழுவதையும் கூறாமல் ஆன்மார்த்த பூஜையை மட்டும் கூறும். இந்நூலின் காலம் 1500—1525.

மெய்கண்ட பரம்பரை ஞானசித்தாந்த குரவர்களானதும் சிவாசாரியர்கள் கன்ம சித்தாந்தராயினர் போலும்.

சிவாசாரியரில் சிலர் தம்மைக் குரு என்றும் சிலர் பட்டர் என்றும் கூறிக்கொண்டனர்.

நன்றி - கலைக்களஞ்சியம்

---

★ ★ ★

# திருவீழிமிழலை ஸ்ரீ கல்யாணசுந்தரமூர்த்தி

திருவாரூர் — மயிலாடுதுறை இருப்புப் பாதையில் 12 கி. மீ. தூரத்தில் இத்திருத்தலம் உள்ளது. ஆடுதுறை, பேரளம், கும்பகோணம், திருவாரூர், பூந்தோட்டம் முதலிய ஊர்களிலிருந்து பேருந்துகளில் இத்திருவூருக்குச் செல்லலாம். இங்குள்ள இறைவன் விழி அழகர். விழி அழகீசர் என்றும் இறைவி சுந்தர குஜாம்பிகை என்றும் அழைக்கப்பெறுகின்றாள். இங்குள்ள உற்சவமூர்த்தி கல்யாண சுந்தரர் என்று அழைக்கப்படுகிறார். மூலவரின் பின் இறைவன் உமையோடு உள்ள திருமணக் கோலமும் உள்ளது. இங்குள்ள கல்யாண சுந்தரருக்கு அர்ச்சனை செய்து ஏழைப் பெண்களுக்கு மாங்கல்ய தானம் தர திருமணம் நடக்காத ஆண் பெண்களுக்கு விரைவில் திருமணம் கைகூடும். பிரதோச வேளையில் தொடர்ந்தாற்போல ஒருமண்டலம் சென்று இறை தரிசனம் செய்து வரச் சகல காரியமும் கைகூடும்.

அர்ச்சனை — மல்லிகை, செந்தாமரை,
நிவேத்தியம் — சக்கரைப் பொங்கல், பாயாசம்
நாள் — திங்கள், வியாழன்
பலன் — திருமணத் தடங்கல் தீரும், கணவன் மனைவி ஒற்றுமை, புரிந்துகொள்ளுதல்

இங்குள்ள கல்யாண சுந்தரருக்கு ரோஜா மாலை அணிவித்துப் பூச்செண்டு கொடுத்தல் சிறந்தது.

# குருவும் தலைமைச் சீடரும்

அமரர் "எல்லாவி"
தமிழ்நாடு

(சென்ற இதழ் தொடர்ச்சி ... ...)

விடியற்காலம் மூன்று மணிக்கு ஸ்நானம் செய்துவிட்டு, குருஜி ஸ்வாமியைத் தரிசனம் செய்ய வந்த பொழுது ஸ்வாமி 'ஒன்றும் பயம் இல்லை உள்ளும் புறமும் எல்லாம் ஒன்றுதான். நல்லதே நடக்கும்; நடுங்க வேண்டாம்' என்றார். தொடர்ந்து 'இரண்டு நாட்களாக நிகழ்ச்சி நடக்கவில்லை. போய் அதை முடித்து விட்டு வா' என்றார்.

குருஜி அவர்கள் சென்னை மயிலையை அடைந்து நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கே நேராக வந்த போது இரவு 9 மணி ஜனங்கள் அளவற்ற மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தார்கள்.

காலட்சேபம் மிகச் சிறப்பாகத் தொடர்ந்து நடைபெற்றது. நிகழ்ச்சித் தொடரின் இறுதிநாள் அன்று துக்காரம் வைகுண்டம் ஏகும் கட்டம். அங்கே பெரிய அளவில் வைத்திருந்த ஸ்வாமியின் திருவுருவப் படத்திற்கு மிகப் பெரிய தண்டை மாலை சூட்டியிருந்தார்கள். துக்காராம் வைகுண்டம் செல்லும் காட்சியை குருஜி மிகச் சிறப்பாக வருணித்துச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது ஸ்வாமியின் மீதிருந்த மாலை அவிழ்ந்து விழுந்தது.

அதே நேரத்தில் சபையில் ஒரு சலசலப்பு. கூட்டத்தினிடையே அமர்ந்து கதையைக் கேட்டுக் கொண்டிருந்த வயது முதிர்ந்த அம்மாள் மயங்கி விழுந்திருக்கிறார். 'கிருபா அமெச்சூர்' டாக்டர் ராமமூர்த்தி அவர்கள் அந்த அம்மாளைச் சோதித்துப்பார்த்துவிட்டு அந்த அம்மாள் பரமபாதம் அடைந்து விட்டதாகச் சுருக்கமான குறிப்பு ஒன்று எழுதி, குருஜி அவர்களுக்கு அனுப்பி வைத்தார்.

குருஜி அனைவரும் அமைதியாக இருக்கும்படியும் அந்த அம்மாள் மிகுந்த புண்ணியம் செய்தவர் என்றும் அறிவித்து விட்டு மண்டலியாரைக் கொண்டு அந்த அம்மாளின் உடலை அவர்கள் வீட்டுக்குக் கொண்டு செல்லுமாறு பணித்தார். பிறகு ஒரு துளசி மாலையோடு தாமும் அங்கே சென்றார்.

அந்த அம்மாள் மிகவும் ஏழையாம். ஒரே பிள்ளையாம். வேலை தேடிக் கொண்டிருக்கிறானாம். "ஐம்பத்தாறு நாள் புராணம் கேட்டுவிட்டேன். இன்றொடு அது முடிகிறது. நாளை என்ன செய்வேன்? இன்று துர்க்காராம் பரமபதம் போகும்போது தானும் போனால் எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்று.

அந்திமச் செலவுக்குப் பணம் இல்லை என்று குருஜி கேள்விப்பட்டார். அன்று காலை ஒரு பையன் அவரிடம் வந்து தன் கல்யாணத்திற்குக் குருஜி அவர்கள் அவசியம் வரவேண்டும் என்று அழைத்து அவரி

டம் ரூபாய் ஐந்நூறு கொடுத்துச் சென்றிருந்தான். அந்தத் தொகையை குருஜி அந்த ஏழைக் குடும்பத்திற்கு அளித்தார்.

அதன் பின்னர் தாபோவனம் போன பொழுது குருஜியிடம் ஸ்வாமி கேட்டார்; 'அந்த அம்மாள் துக்காரம் வைகுண்டம் போன பொழுது சேர்ந்து போனாளா?' என்று பிறகு ''ஸ்வாமியிடம் தான் ஐக்கியம் ஆனால் அதன் அடையாளமாகத் தான் மாலையை அவிழ்த்து விட்டேன்'' என்றார். இதைக் கேட்ட குருஜி அவர்களுக்கு மெய் சிலிர்த்தது.

நடமாடும தெய்வமாகிய தபோவனம் சத்குரு ஸ்ரீ ஞானனந்தகிரி ஸ்வாமிகள் அவர்களால் 'அம்பிகை தாஸர்' என்று பட்டம் சூட்டப்பெற்று மிகுந்த வாத்ஸல்யத்துடன் 'தாஸர்' என்று செல்லமாக அழைக்கப்பெற்று பக்தகோடிகள் தம்மைப் பின்பற்ற வேண்டும் என்ற நோக்கத்தின் கீழ், 'குருஜி' என்று குறிப்பிடப்பெற்ற ஸ்ரீ ஹரிதாஸ்கிரி ஸ்வாமிகள் அவர்கள் இன்று உள்நாடு, அண்டை நாடுகள், அயல்நாடுகள் ஆகிய இடங்களில் வாழ்ந்து வரும் பல்லாயிரக் கணக்கான பக்தர்களால் 'குருஜி, குருஜி' என்று போற்றப் பெறுகிறார். இரவு, பகல், எந்நேரமும் அவரை சூழ்ந்து நிற்கும் பக்தர்கள் அவருடைய தரிசனத்திற்கும், அருட்கண் கடாட்சத்திற்கும் நல்லுபதேசங்களுக்கும் தவங்கிடக்கிறார்கள்.

குருவருளின் நீங்காத் துணை கொண்டு அவர்கள் இட்ட அருள் ஆணையைச் சிரமேற்கொண்டு பல ஆண்டு காலமாகப் பாரெங்கும் பவனி வந்து, நாம சங்கீர்த்தன முழக்கமும், சத்கதா பிரவசனங்களும், நிகழ்த்தி மக்களிடையே பக்தியைப் ப்ரப்பும் நற்பணியில் ஈடுபட்டுள்ள குருஜி அவர்கள் இந்த அக்டோபரில் பக்தர் அழைப்புக்கிணங்கி, கனடா, பாரீஸ், லண்டன், ஸ்டேட்ஸ் முதலிய இடங்களுக்குச் செல்கிறார்கள். அவர்களுடைய மேலைநாட்டு பயணம் இது மூன்றாம் முறை.

'செப்புமொழி பதினெட்டு' என்பது வழக்கு குருஜி அவர்கள் எந்த மொழியையும் சரளமாகப் பேசுகிறார்கள். 'பதினெண் புராணம்' என்பது மற்றொரு வழக்கு. எந்தப் புராணத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட சொல்கிறார்கள். இசைக்கு ஸ்வரங்கள் ஏழுதான்; ஆனால் அதன் விரிவுகள் உலகளவும் பரந்து கிடக்கின்றன. அவற்றில் எந்தப் பகுதியையும் மிக அனாயாசமாக இசைக்கிறார்கள். மந்திர சாஸ்திரம், தந்திர சாஸ்திரம், வேதங்கள், உபநிடதங்கள் இவற்றில் எந்த ஓர் அம்சத்தையும் அனாயாசமாக ஆள்கிறார்கள். ஸ்ரீ வித்யா மார்க்கத்தில் மிக மிகத்துறை போன, பழுத்தபழமான முதியோர்கள் பலர் குருஜி அவர்களைத் தரிசிக்க வருகிறார்கள். அந்த சாஸ்திர சம்பந்தமான நுணுக்கங்கள் பலவற்றைப் பற்றி அவர்களிடையே நிகழும் உரையாடல்களைச்செவிமடுக்கும்பொழுது புல்லரிக்கிறது; வேறு எந்த உலகத்திற்கோ சென்று விடுகிறோம்.

சற்றே சிந்திப்போம்; குருஜி அவர்கள் இத்தனை அம்சங்களையும் எங்கே பயின்றார்? எப்பொழுது

பயின்றார்? யாரிடம் பயின்றார்? யாருக்கும் தெரியாது. படிப்பறிவால் கிட்டுவது கையளவு; குருவருளால் கிட்டுவது உலகளவு. இதை, குருஜி அவர்களிடமிருந்து வெளிப்படும் ஆற்றல் தெள்ளத் தெளியப் புலப்படுத்துகிறது. அவர்களுடைய திவ்யத் திருமேனிக்குக் கணக்கிடப் பெறும் இன்றைய உலகாயதமான பிராயத்தின் அளவையும், அவர்களின் பல துறை ஞானத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்த உண்மை புலனாகிறது. ஸ்வாமி ஒருநாள் பிரம்ம முகூர்த்தத்தில் தம்மை வந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்த குருஜி அவர்களின் சிரசில் தம் பாதங்களைத் தூக்கி வைத்துத் திருவடி தீட்சை அளித்தார். அந்த வினாடி முதல் குருஜி அவர்கள் மனித கோடியிலிருந்து மிக மிக உயர்ந்து, தெய்வ அம்சம் பெற்றவர் ஆனார்!

சாமான்யமான குருமார்களே தம்முடைய மாணவர்களுக்கு எளிதில் அருளாசியை வழங்கிவிடுவதில்லை. ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு மேல் ஸ்தூல உருவில் பூமியில் நடமாடி வந்ததாகக் கூறப்பெறும் குருதேவர் அவர்கள் அத்தனை எளிதில் அருளாசியை அளித்து விடுவாரா? சந்நியாசம் பெற்றவர்களும், பெறாதவர்களுமாக அவருக்கு எத்தனை எத்தனையோ சிஷ்ய கோடிகள். எல்லாருக்குமே இந்த நல்வாய்ப்புக் கிட்டிற்றா? பாத்திரம் அறிந்து அருட்பிச்சை இடுவதில் ஸ்வாமிக்கு நிகர் ஸ்வாமி தான்!

துறவி என்று பெயர்தான். நூற்றுக்கணக்கான குடும்பங்களின் இன்ப துன்ப அனுபவங்களைக் கேட்டு, பரிகாரங்களைச் சொல்லி, தாமே நேரிலும் பரிகாரங்கள் செய்து நோய் நொடிகளைத் தீர்த்து எல்லாரோடும் முக்கியமாக சின்னஞ்சிறு குழந்தைகளோடு--சிரித்துப்பேசி, ஒட்டி உறவாடி பெரிய குடும்பியாக விளங்கினார். ஸ்வாமி 'துறவிக்கு ஏன் இவையெல்லாம்?' என்று நினைத்தவர் எவரும் இலர்.

ஸ்வாமியின் மாற்று உருவாக, அதே அச்சில் எல்லா அம்சங்களிலும் விளங்கும் குருஜி அவர்கள் தம் குருதேவரைப் போலவே நடந்துகொள்கிறார். 'துறவிக்கு ஏன் இவையெல்லாம்?' என்று இவரைப் பற்றியும் நினைத்தவர் எவரும் இலர். ஆனால் அன்று ஸ்வாமி பழுத்தபழமாக விளங்கினார்; குருஜி அவர்களோ மனிதப் பிராயத்தால் உடற்தோற்றத்தில் முதுமை பெறவில்லை. இதைக் கொண்டு எடை போடுபவர் ஏமாந்து போவர்!

தெய்வத்தின் பிரதிநிதி ஸ்ரீஞானானந்தகிரி ஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீ ஸ்வாமிகளின் பிரதிநிதி ஸ்ரீஹரிதாஸ் கிரி ஸ்வாமிகள். பக்த கோடிகளின் பெருந்தவப் பயன் இது. அறிந்தவர்கள் நினைவு கூரவும், அறியாதவர்கள் அறிந்து கொள்ளவுமே இந்தக் குறிப்பு.

ஸ்ரீ சத்குரு தேவரின் அனுக்கிரஹம் அனைவருக்கும் கிட்டட்டும்!

ஸ்ரீ குருஜி அவர்களின் 'அருளாசியை யாவரும் பெறட்டும்!

உலகம் க்ஷேமமாக இருக்கட்டும்!

ஓம்.

(முற்றும்)

உ
சிவமயம்

# முத்தமிழ் வேதத்தில் ஆகமத்தின் அரும்பொருள்–4

**சிவ. சண்முகவடிவேல் அவர்கள்**

*முத்தமிழ் வேதம் உய்வைத் தரும் சைவத்திருமுறைகளில் ஒன்று முதல் எட்டு வரையிலுளதென்பர். ஆகமத்தின் அரும்பொருள் நான்கா வன சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன தேவாரம் திரு வாசகம் திருக்கோவையார் என்பன பன்னிரு திருமுறைகளில் முதல் எட்டுத் திருமுறைகள் ஆகும். சரியை புறத்தொண்டு கிரியை அகமும் புறமும் இணைந்த செயற்பாடு, யோகம் அகத்தில் நிகழ்வது ஞானம் அகம் புறம் அனைத்திலும் மெய்ஞ்ஞானத்தைக் காணும் போதம்.*

**சரியை :**

*சரியைக்கான செய்திகளை உணர்த்தும் முத்தமிழ் வேதம் இவை யாகும்: ''நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா, நித்தலு மெம் பிரானுடைய கோயில் புக்குப் புலவர்வதன்முன் அலகிட்டுமெழுக்கு மிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித் தலையாரக் கும்பிட் டுக் கூத்துமாடிச் சங்கரா சயபோற்றி போற்றி யென்றும் அலை புனல்சேர் செஞ்சடையெம் ஆதியென்றும் ஆரூரா என்றென்றே அலறா நில்லே'' (திருமுறை - 6)*

*''ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற்கு அன்பிலை என்புருகிப்*
*பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்*
*சூடுகின்றிலை சூட்டுகின் றதும்இலை துணையிலி பிணநெஞ்சே*
*தேடு கின்றிலை தெருவுதொறு அலறிலைச் செய்வதொன் றறியேனே,*
*(திரு 8)*

*''ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்*
*பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்*
*கோமான்நின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்*
*சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே - (இதுவும்)*

*''தலையே நீ வணங்காய்'' என்று தொடங்கும் திருவங்கமாலை*
*(திருமுறை - 4)*

*''நீ நாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்*
*சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே*
*பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப*
*நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே (திருமுறை - 2)*

''விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கினாற் பதிற்றி யாகும்
துளக்கில்நன் மலர்தொ டுத்தால் தூயவிண் ணேற லாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞான மாகும்
அளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகள்தாம் அருளு மாறே

(திருமுறை - 4)

''கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுது நாமடியோம் -

''காவினை யிட்டுங் குளம்பல தொட்டுங் கனிமனத்தால்
ஏவினை யாலெயின் மூன்றெரித் தீரென் றிருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுது நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் -

''மனத்தகத்தோர் பாடலாடல் பேணியிராப் பகலும் நினைத்தெழுவார்-

''பொன்னடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும் நின்னடியார்

''பாங்கினல்லார் படிமஞ்செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கிநல்லார் பாடலோடு தொழுகழலே வணங்கித்
தாங்கிநில்லா வன்பினோடுந் தலைவநின்றா ணிழற்கீழ்
நீங்கிநில்லா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே -

''நிருத்தகீத ரிடர்களையாய் -

''பசுபதி யீச்சரம் பாடுநாவே -

''தொங்கலுங் கமழ்சாந்து மகிற்புகையுந் தொண்டர்கொண்
டங்கையாற் றொழுதேத்த -

இவையாவும் முதலாம் திருமுறை சார்ந்தவை.

''சலம்பூ வொடுதூ பமறந் தறியேன்
றமிழோ டிசைபா டன்மறந் தறியே
னலந்தீங் கிலுமுன் னைமறந் தறியே
னுன்னா மமென்னா வின்மறந் தறியேன் -

''தொடுத்த மலரொடு தூபமுஞ் சாந்துங்கொண் டெப்பொழுது
மடுத்து வணங்கு மயனொடு மாலுக்குங் காண்பரியான் -

இவை நாலாம் திருமுறையிலுள்ளவை.

சிவாகமத்தில் உரைக்கப்படும் சரியைத் தொண்டிற்கான ஆகம அரும்பொருள் செய்திகள் அனேகம் முத்தமிழ் வேதம் பத்தியோடு பரவக் காணலாம்.

இனி, கிரியை பற்றிய குறிப்புக்களைக் காண்போம்.

(கிரியை பற்றிய குறிப்புகள் அடுத்த இதழில் தொடரும் ... ...)

தொடர் - 1

# சிறுவர் கந்தபுராண அமுதம்

— மாதாஜி



## தோற்றுவாய்

*சிறுவர் கந்தபுராண அமுதம் என்று கூறப்படுகின்ற இச்சிறு நூல், மிகவும் சுவையான கதைகளைக்கொண்டது. அமுதம் சாவா மருந்து ஆகும். இந்த மருந்தைத் தேவர்களும் அசுரர்களும் திருப்பாற் கடலிருந்து, மேருமலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் கொண்டு கடைந்தெடுத்தனர். பிணி மூப்பு சாக்காடு என்பவற்றை நீக்கும் தேவாமிர்தம் போன்றது. கந்தபுராணத்திலிருந்து கடைந்தெடுக்கப்பட்ட இக்கதைகளாகும்.*

*கந்தபுராணம் என்று கூறப்படுகின்ற அருட்சாகரத்திலிருந்து கடைந்தெடுக்கப்பட்ட முருகப்பெருமானின் கதைகள் மிகவும் இனிமையாகவும், பக்தி நனி சொட்டும் வகையிலும் தெவிட்டாத தேன் சொட்டும் செந்தமிழில் இனிமையும் எளிமையும் பொருந்திய வசன நடையில் சிறப்பாகச் சிறுவர்களும் பொதுவாக மற்றையவர்களும் படித்துப் பயன் பெறும் வகையில் எழுதப்பட்டது.*

*ஆகையால் அருள் ஒளியில் தொடர்ந்துவரும் அருட்பிரவாகம் ஏடேக்கும் '' கந்தபுராண அமுதம் '' என்னும் கதைகளை வாசித்துப் பயன் பெறுவீர்களாக.*

### 1. கந்தபுராணத்தின் பெருமை :

*புராணமென்றால் பழைமையானது என்று பொருள் படுகின்றது. புராணங்கள் பதினெட்டாகும். இவற்றை யாத்தவர் வேத வியாசர் என்பவராவர்.*

*புராணங்களுள் சிவபுராணம் பத்து, விஷ்ணு புராணம் நான்கு பிரம்ம புராணம் இரண்டு, சூரிய புராணம் ஒன்று, அக்கினி புராணம் ஒன்று எனப்படும்.*

கலியுகம் பிறந்து விட்டது. முனிவர்கள் கலியின் கொடுமைகளை நினைந்து நினைந்து வருந்தினார்கள். கலியுகத்தில் அதர்மம் தலை தூக்கித் தங்களை வருத்தும் எனப் பயந்தார்கள். அப்போது வியாச பகவான் தேவர்களை நோக்கி, ''நீங்கள் இந்தக் கலியுகத்தின் கொடு மைகளிலிருந்து விடுபட வேண்டுமாயின் கலியுக வரதனாகிய கந்தப் பெருமானை வழிபட வேண்டும்'' எனக் கூறினார்.

கந்தப்பெருமானின் ஈடிணையற்ற அருள் கீர்த்தி என்பவற்றினால் கலியினால் உண்டாகுகின்ற கொடுமைகள், பஞ்சமா பாதகங்கள் என் பவற்றை நீக்க முடியும். கலியுகத்தின் வெம்மையைத் தீர்ப்பது கற்பக தருவின் நிழல் போன்ற கந்தப்பெருமானின் கருணைக் கடலாகும். கலி யுக வரதன் கந்தப்பெருமானுடைய திவ்விய அற்புதமான புராணத்தை சிறுவயதில் படிப்பதால் கந்தப்பெருமானின் அருளொளியால் ஆணவ மாகிய மல இருள் நீங்கி, ஞானஒளி உண்டாகும். துன்பம் ஏதும் இன்றி எப்போதும் இன்பமாக வாழலாம்.

கந்தபுராணம் என்னும் அமுதக் கடலுள் புகுந்தால் எத்தனை எத் தனை உண்மைகள் உண்டோ, அவற்றை விளக்குகின்ற முத்துக்களை எடுக்கலாம். நீதிநெறி வழிப்படுத்துகின்ற இரத்தினங்களைக்காணலாம். பக்தி வழங்குகின்ற அமுத வெள்ளத்தை வாரி வாரியுண்டு பேரானந் தமும், இறவாப் பெரும்புகழும் பெறலாம். பேரானந்தம் அடையலாம். கந்தபுராணக் கனியமுது கந்தப்பெருமான் ஆன்மாக்கள் (மானிடர்) மீது கொண்ட கருணை வெள்ளம் மனிதகுலத்தின் அரும்பெரும் களஞ் சியம் என்றால் மிகையில்லை.

கந்தபுராணத்தை வடமொழியில் எழுதியவர் வியாச முனிவராகும். கந்தபுராணம் ஏழு காண்டங்களை உடையது. அவை உற்பத்தி காண் டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம் உபதேச காண்டம், தேவகாண்டம், தட்சகாண்டம் என்பனவாகும்.

வேதவியாச முனிவரால் வடமொழியில் எழுதப்பட்ட கந்தபுரா ணத்தை, இன்பத் தேன்மழை சொரியும் செந்தமிழில் கந்தபுராண மெனப் ஆறுகாண்டமாக பாடியவர் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிக ளாவர்.

## 2. கச்சியப்ப சிவாசாரியார்:

தேவர்களாற் போற்றப்படுவது தொண்டைமண்டல நன்நாடாகும். இந்நாட்டின் திலகம் போன்றது காஞ்சிமா நகரம் ஆகும். இம்மாநகரத் தில் ஆதிசைவ வேதியர் குலத்தில் காளத்தியப்ப சிவாசாரியர் குடும்பத்தில் கச்சியப்ப சிவாசாரியார் தோன்றினார்.

காஞ்சிமா நகரிலுள்ள குமரக்கோட்ட கந்தவேள், இவர்களுடைய குலதெய்வமர்கும். குமரப்பெருமானின் திருவருளினால் வலம்புரிச்சங்கின் ஆணி முத்துப்போல உதித்த கச்சியப்ப சிவாசாரியார் தமிழினம் உய்யவும், சைவநெறி, கலாசாரம், பண்பாடு தழைக்கவும், கந்தப் பெருமானின் புகழ்மணம் பாரெங்கும் பரவி நன்மை பயக்கவும், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தார். கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்து விளங்கினார். வடமொழியாகிய சமஸ்கிருதம், தென்மொழியாகிய தமிழ்மொழி ஆகியன கற்று மாபெரும் பாண்டித்தியம் அடைந்தார். இதனால் தனக்குத் தானே உவமையாக விளங்கினார்.

சைவசமயத்தில் பிறந்த ஒவ்வொருவரும் சமய தீட்சை பெற்றே ஆகவேண்டும். சமயதீட்சை பெறாதவர்கள் உண்மையான சைவசமயத்தவர்கள் அல்லர். இதனால் கச்சியப்ப சிவாசாரியார் தமது சிறு வயதில் பிரவேச தீட்சை, விசேட தீட்சை என்கின்ற சிவதீட்சை ஆகியன பெற்றார்.

தமிழ் வேதங்களாகிய தேவாரம் போன்ற திருமுறைகளையும், எம் பெருமானால் அருளப்பட்ட எழுதா மறையாகிய வேதாகமங்களையும் சந்தேகமறக் கற்று ''ஞானக் களஞ்சியம்'' போன்று காணப்பட்டார்.

ஒருநாள் அற்புதமான கனவொன்று கண்டார். உலக போகங்களில் இருக்கும் மக்கள், பிறவிக் கடலிருந்து விடுபட வேண்டுமென்று திருவுளம் கொண்ட முருகப்பெருமான், கச்சியப்ப சுவாமிகளின் கனவில் வந்தார்.

''அன்பனே! தமிழ் உலகம் தழைத்தோங்க, வடமொழியிலுள்ள ஸ்கந்த புராணத்தை தேன்சுவை சொட்டும் இன்பத்தமிழால் பாடுக'' என்று கூறினார். பின்னர் முருகப்பெருமான் ''திகட சக்கரச் செம் முகம் ஐந்துளான்'' என்ற அடியை எடுத்துக் கொடுத்தார். உடனே மறைந்து விட்டார்.

மனம் வாக்குக் காயம் ஆகிய முக்கரணங்களுக்கும் எட்டாதவர் முருகப்பெருமான். அத்தகைய கந்தப்பெருமானின் திவ்விய சரிதங்களைச் செய்யுளாக ஒவ்வொரு நாளும் எழுதுவார். எழுதியவற்றைக் கந்தகோட்டத்து கந்தசுவாமியின் கர்ப்பக் கிருகத்தில் வைத்துத் திருக் கதவை மூடிப்பூட்டிச் சாவிக்கொத்தை வீட்டுக்குக் கொண்டு செல்வார்.

கந்தவேளின் கருணைதான் என்னே! கச்சியப்பசுவாமிகள் எழுதிய பிரதிகளை உடனுக்குடன் திருத்தி வைப்பார். இவ்வாறு கச்சியப்ப சுவாமிகள் எழுதிய 10345 கந்தபுராணச் செய்யுட்களை முருகப்பெருமான் திருத்திய பின்பு அரங்கேற்றம் செய்ய கச்சியப்பர் நினைந்தார்.

காஞ்சிமா நகரம் இந்திரலோகமாக காட்சி கொடுத்தது கந்தகோட்ட முன்றிலில் மாபெரும் மேடை அமைத்து அலங்கரிக்கப்பட்டது. சைவசமயத்

பெரியார்கள், பல நாட்டு அரசர்கள், பக்தர்கள், புலவர்கள் வித்து வான்கள் இவ்வாறு பல மக்கள் கூடியதால் அஃது மாபெரும் சபை யாகி கண்கொள்ளாக் காட்சியாகக் காணப்பட்டது.

கச்சியப்ப சுவாமிகள் கந்தபுராணத்தைக் குமரகோட்டத்தின் முருகப் பெருமானின் பீடத்தில் வைத்துப் பூசனை செய்தார். அடியார்கள் கச் சியப்ப சுவாமிகளை இந்திர பீடம் போன்ற உயர்ந்த இரத்தின பீடத்தில் அமரச் செய்தார்கள். கச்சியப்ப சுவாமிகள் கந்தபுராணத்தை அரங் கேற்றி விளக்கம் செய்ய ஆரம்பமானார்.

முதலில் விநாயகப் பெருமானின் காப்பாகிய ''திகட சக்கரம்'' என்ற செய்யுளின் சொற்களைப் பிரித்துப் பொருள் சொல்ல ஆயத்த மானார். ''விளங்கா நின்ற பத்துத் திருக்கரங்களும், ஐந்து திருமுகங் களும் உடைய சிவபெருமான்'' என்று பொருள் கூறினார்.

''நிறுத்து'' என்று சபையில் இருந்து ஒரு குரல் வந்தது. சபை யில் ஒரு புலவர் எழுந்து, ''திகழ் சக்கரம்'' எவ்வாறு ''திகட சக் கரம்'' எனப் புணர்ந்தது. அதற்கு இலக்கணவிதி தொல்காப்பிய இலக் கணம் முதலியவற்றில் இல்லை என்றார். ''இந்த அடியை எடுத்துத் தந்தவர் கந்தகோட்டத்து முருகப்பெருமான்'' என்று கச்சியப்பர் கூறி னார். அதனைக் கேட்ட புலவர் புன்முறுவல் செய்தார். இந்த அடியை முருகப்பெருமான் எடுத்துத் தந்தாரென்றால், அவரே வந்து இதற்கு இலக்கணம் கூறட்டும் என்று கூறினார்.

கச்சியப்பர், நூலை கோயிலுள்ள முருகப்பெருமானின் பீடத்தில் வைத்துப் பூசை செய்தார். திருக்கதவைப் பூட்டினார். உண்ணாது, உறங்காது, வெறுந்தரையில் கவலையுடன் படுத்துவிட்டார். கனவில் முருகப்பெருமான் தோன்றி, ''இதற்கு இலக்கணவிதி அகத்தியர் எழுதிய வீரசோழியத்தில் உள்ளது. நாளைக்கு வீரசோழிய நூலு டன் ஒரு வயோதிபர் வருவார்'' என்று அன்று, அருளி மறைந்து விட்டார்.

மறுநாள் சபை கூடியது முருகப் பெருமான் கச்சியப்ப சுவாமி களுக்கு அருளியது போல ஒருவயோதிபர் வீரசோழிய நூலு டன் வந்தார். ''திகட சக்கரம்'' என்பதற்குரிய இலக்கண விதியை விளக்கம் செய்தார். உடனே கண்ணிமைக்கு முன் பிரகாச ஒளியுடன் மறைந்தார். சபை கச்சியப்ப சிவாச்சாரியாரின் மகிமை கண்டு மகிழ்ந்து பாராட்டினார்கள்

ஒரு வருடமாக கந்தபுராண அரங்கேற்றம் நடந்தது. பின்னர் கந்தபுராண நூலையும், கச்சியப்ப சிவாச்சாரியாரையும் யானைமேல் வைத்து வீதி உலா வரப்பட்டது. அதன் பின்னர் ''கந்தபுராணம்'' தமி

முகம் எங்கும், கடல் கடந்து சைவத்தமிழர் வாழும் இடமெங்கும் பரவி எல்லாராலும் கந்த புராணம் படிக்கப்பட்டது கந்தன் கருணை வெள்ளமும் அருட்பெரும் புனல் நதியாய் ஓடிப் பாயத் தொடங்கியது.

### 3. விகட சக்கரன் :

சிவபெருமான் மீது சினம் கொண்ட தக்கன் சிவபெருமானை அழைக்காமல் யாகம் செய்தான். தக்கன் மீது கோபம் கொண்ட சிவன் தக்கனின் யாகத்தை அழிக்க வீரபத்திரரை அனுப்பினார். வீரபத்திரரைத் திருமால் எதிர்த்துத் தன் சக்கராயுதத்தை ஏவினார். அதனை வீரபத்திரர் அணிந்திருந்த வெண் தலைமாலையின் ஒரு வெண்தலை கௌவிக் கொண்டது.

திருமாலின் சேனைத் தலைவராகிய விஷ்வகணேசர் விகடக் கூத்தாடினார். அந்த வெண்டலை சிரித்தது. சக்கரம் கீழே விழுந்தது. விநாயகப் பெருமான் அந்தச் சக்கரத்தை எடுத்து மறைத்தார். மீண்டும் விஷ்வகணேசர் விகடக் கூத்தாடினார். விநாயகப் பெருமான் மகிழ்ந்து சக்கரத்தைக் கொடுத்தார்.

விகடக் கூத்தாடுவதைக் கண்டு மகிழ்ந்து சக்கரம் விநாயகப் பெருமான் அருளியமையால், விநாயகப் பெருமானுக்கு விகட சக்கரன் என்ற நாமம் இடப்பட்டது.

### 4. சகடசக்கரத் தாமரை நாயகன் :

ஒரு காலத்தில் தாரகசன், கமலாசன், வித்தியுன்மான் என்னும் மூன்று அசுரர்கள் இருந்தார்கள். அவர்கள் வாள் வலியாலும் தோள் வலியாலும் தமக்கு ஒப்பாரும், மிக்காரும் இன்றிக் காணப்பட்டார்கள். பல காலமாக அந்த மூன்று அசுரர்களும் பிரம்மாவை நோக்கிக் கடுந் தவம் செய்தார்கள்.

பிரம்மா தோன்றினார். அசுரர்கள் மூவரும் ''சுவாமி நாங்கள் ஒரு காலத்திலும், ஒருவராலும் அழியாதிருக்க வரம் தரல் வேண்டுமெனக் 'கேட்டார்கள்'. ''பிறந்தவர்கள் இறந்தே ஆக வேண்டுமென்று'' பிரமா கூறினார். பின்னர் அசுரர்கள் நாங்கள் பூமியில் இரும்பாலும், அந்தரத்தில் வெள்ளியாலும், ஆகாயத்தில் பொன்னாலும் மதில்கள் கொண்ட முப்புரங்கள், ஒருவருடம் ஒருமுறை உலகைச் சுற்றி ஒன்று கூடும்போது சிவபெருமான் எங்களை அழிக்கலாம் என்று வரம் கேட்டார்கள்.

நாளுக்கு நாள் முப்புர அரக்கர்களின் கொடுமை உபத்திரவம் கூடிக்கொண்டே இருந்தது. தேவர்கள் மிகவும் துன்பமடைந்து வருந்தினார்கள். இமயமலை சென்று எம்பெருமானிடம் தேவர்கள் அசுரரின் கொடுமைகளை முறையிட்டார்கள்.

சிவபெருமான் தேவர்களை நோக்கி அசுரர்களைக் கொல்ல நானே நேரே செல்கின்றேன். நீங்கள் தேரை ஆயத்தம் செய்யுங்கள் என்றார். தேவர்கள் வேதங்களைக் கொண்டு பிரமாண்டமான இரதம் செய்தார்கள் எம்பெருமான் விக்கினேஸ்வரப் பெருமானை நினைந்து வணங்காது தேரில் ஏறினார். விக்கினங்களைத் தீர்க்கும் விக்கினேஸ்வரப் பெருமான் கோபம் கொண்டார். உடனே தேரின் அச்சை முறித்து விட்டார். அச்சிலாத தேர்முச்சாணும் ஓடாது என்பது பழமொழி. உடனே எம் பெருமான் புன்முறுவல் செய்தார். முப்புரங்களும் மூன்று அசுரர்களுடன் எரிந்தது.

(தொடரும்......)

★ ★ ★

## அருளொளி காட்டும் அம்பிகையே

அருளினது ஒளிபரவ அடியவர்கள் துயரகல
அபயமது அபயமென்றே
அநுதினமும் உனையணுகி வணங்குமடி யாரிடர்கள்
நீக்கிநலம் காட்டியருளும்
திருமிகுவே கொண்டோங்கும் தீனதயா பரிநீயே
தீந்தமிழர் வாழ்வினொளியே
திசையெட்டும் இசைகொள்ள திரிசூலம் கைக்கொண்டு
தீயோரை ஓட்டியருளும்
பெருமையது கொள்வீர சக்தியெனும் பெயருடனே
பெரும்புவியில் எமைக்காக்குமுன்
பேரருளே தஞ்சமன்றி வேறுதுணை ஏதுண்டு
பெருமாட்டி உந்தனருளால்
அருவினைகள் நீக்கிவளர் அகதியெனும் நிலைபோக்கி
அகத்திலொளி நலம்காணவே
ஆடுகளம் மீதிலிடி ஓசைகெட அமைதியெனும்
பண்பாடச் செய்யுமுமையே.

**சு. குகதேவன்**
தெல்லிப்பழை.

## கருணை புரிவாய்

எட்டாங் கட்டையடி யுறைபவளே — அடியவர்
துஸ்டநிஸ் கிரக தூரலாம் பரியே ஸ்ரீ துர்க்கா — என்
கஸ்ட நஸ்டங்கள் கவலைகள் போக்கியென் வாழ்வில்
அஸ்ட லக்குமி யருள் கிடைக்க கருணை புரிவாய் தாயே!

**இராம ஜெயபாலன்**
கொக்குவில்

**உங்கள் அபிமான 'அருள் ஒளி' கிடைக்கும் இடங்கள்**

**அலுவலகம்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை.**

**ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்**
**கோவில் வீதி**
**நல்லூர்.**

உ

# பாரதியின் கவிதைகளில் சக்தி வழிபாடு

செல்வி த. தவனேஸ்வரி, B. A. அவர்கள்

"சக்தி பதமே சரணென்று நாம்புகுந்து
பக்தியினாற் பாடிப் பலகாலும் — முக்திநிலை
காண்போம் அதனால் கவலை பிணிதீர்ந்து
பூண்போம் அமரப் பொறி"

*என்பது பாரதி வாக்கு. இறைவனைப் பல நிலைகளிலும் வைத்துப் போற்றும் மரபு எமது சமயத்துக்குண்டு. இவற்றிலும் தாய்மைப் பண்புள்ள வடிவில் போற்றுதலே மேலும் சிறப்பைத் தருகின்றது. இந்த வகையில் மகாகவி பார்தி முழு உலகமுமே சக்தி மயமானது என்பதைத் தனது கவிதை வரிகளுடாகப் புலப்படுத்துகின்றார். பாரதிக்கு பராசக்தி உணர்த்திய பேருண்மைகளில் ஒன்று பெண்மையின் பெருமையாகும். 'புதுமைப் பெண்' பாட்டில் பராசக்தியே அப்புதுமைக் கன்னி எனக் குறிப்பிடுகின்றார். எங்கும் எதிலும் சக்தியையே காணுகின்றார் பாரதி. துன்பமில்லாத நிலையே சக்தி, தூக்கமிலாக் கண் விழிப்பே சக்தி, அன்பே சக்தி, தொழிலே சக்தி, முக்தி நிலையே சக்தி, துணிவே சக்தி, தவமே சக்தி, பாட்டால் வந்த மகிழ்வே சக்தி என எல்லாவற்றிலும் சக்தி நிறைந்திருப்பதைப் பாரதி விளக்குகின்றார்.*

"தசையினைத் தீ சுடினும் — சிவ
சக்தியைப் பாடும் நல் அகங்கேட்டேன்"

*என்ற வரிகளுடாக அவரது மன வைராக்கியம் எடுத்துக் காட்டப்படுகின்றது.*

"தேடியுனைச் சரணடைந்தேன் தேசமுத்துமாரி;
கேடதனை நீக்கிடுவாய் கேட்டவரந் தருவாய்
... ... ...
நம்பினோர் கெடுவதில்லை; நான்கு மறைத் தீர்ப்பு;
அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்"

*என்ற வரிகள் மூலம் அன்னையைச் சரணடைந்தால் எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ளலாம் என்கிறார். தனது அனுபவத்தின் ஊடாக அன்னையை எல்லாமாக நேசித்து எம்மையும் அதன்வழி ஆற்றுப்படுத்துகின்றார். தனக்கு வேண்டிய அனைத்தையும் கேட்டுப்பெறும் அன்பு அவருடையது. அன்னையிடம் கேட்டால் அவள் தருவாள் என்ற நம்பிக்கை; உலக வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்தையும் பராசக்தியிடமே கேட்டுப்பெறும் இயல்பு பாரதிக்குண்டு.*

'' காணி நிலம் வேண்டும் — பராசக்தி
காணிநிலம் வேண்டும்; — அங்கு
தூணில் அழகியதாய் — நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் — அந்தக்
காணி நிலத்திடையே — ஓர்மாளிகை
கட்டித்தர வேண்டும்... ''

என்ற பாடல் மூலம் பாரதியினுடைய நம்பிக்கை, அவரது அன்பு என்பவற்றை விளங்கக் கூடியதாக உள்ளது. இது மட்டுமா கேட்டார்? இல்லை. அம்மாளிகைக்குப் பக்கத்திலே பத்துப் பன்னிரண்டு தென்னை மரம், அத்துடன் நிலாவெளி, குயிலோசை என்பவற்றால் என்மனம் மகிழ வேண்டும் என்றெல்லாம் பாடும் பாரதியின் கவிதை எம்மனை வரையும் கவருமன்றோ?

பராசக்தி, முத்துமாரி, காளி, சரஸ்வதி, கலைமகள், சக்தி, லக்ஷ்மி, ஸ்ரீதேவி, பூலோககுமாரி, வீரத்திருவிழியாள் எனப் பற்பல சக்தி வடிவங்களையும் போற்றிப் பாடினார் பாரதியார்.

'' சக்தியென்று நேரமெல்லாந் தமிழ்க் கவிதைபாடி
பக்தியுடன் போற்றி நின்றால் பயமனைத்தும் தீரும் ''

என்பது அவரது நம்பிக்கை.

சக்தி வழிபாட்டின் அத்வைதக் கொள்கையை உள்ளபடி விளக்கு கிறது பாரதியின் கவிதைகள்,

'' நிற்பதுவோ நடப்பதுவோ பறப்பதுவோ நீங்களெல்லாம்
சொப்பனந் தானோ? பல தோற்ற மாயங்களோ? ''

என்று தொடங்கும் இக்கவிதை வரிகளில் நானும் ஒரு கனவோ? இந்த ஞாலமும் பொய்தானோ? என்று கேட்கிறார். எல்லாக் காலங்களிலும் கவிதையானது சக்தியின் அத்வைத உண்மையைத்தான் உய்த்துணர வைக்கிறது என்பது இவரது கொள்கை.

'' காண்பதுவே உறுதி கண்டோம்
காண்பதல்லால் உறுதி இல்லை
காண்பது சக்தியாம் இந்தக்
காட்சி நித்தியமாம் ''

எல்லாம் சக்திமயம் என்பது பாரதி கொள்கை.

உண்மையான சக்தி வழிபாட்டில் பண்டிதருக்கும் இடமுண்டு; பாமரருக்கும் இடமுண்டு, பக்தர்களுக்கும் இடமுண்டு, சித்தர்களுக்கும் இடமுண்டு; சுத்த அறிவே சக்தி என்பதும் சிவம் என்பதும் பாரதி கொள்கை.

'' கானத்து மலைகளுண்டு...
ஒல்லெனுமப் பாட்டினிலே — அம்மை
ஓமெனும் பெயரென்றும் ஒலித்திடுங்காண் ''

இயற்கை அன்னை உலகம் எங்கும் நிறைந்திருக்கின்றாள் சக்தி வழி பாட்டை இயற்கை வழியாகவும், வேதாந்த வழியாகவும் நோக்கலாம் என்பது இவரது கொள்கை. உலகத்துக்கெல்லாம் தாயாகவே அன்னை யைக் கூறுகின்றார்.

''உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரியம்மா
உன்பாதம் சரண்புகுந்தோம் எங்கள் முத்துமாரியம்மா''

இத்தகைய சக்தி வழிபாட்டை அறிந்து நாம் வழிபட்டால் எமக்கு எந்தத் துன்பமுமில்லை என்பது.

''ஆதியாஞ் சிவனுமவன் சோதியான சக்தியுந்தான்
அங்குமிங்கு மெங்குமுளவாகும் — ஒன்றே
யாகினா லுலகனைத்தும் சாகும் — அவை
யன்றியோர் பொருளுமில்லை அன்றியொன்று மில்லை
ஆய்ந்திடில் துயரமெல்லாம் போகும்...''

என்பது ''மகாகாளியின் புகழ்'' கவிதை வரிகளாகும்.

சக்தியின் பல்வேறு வடிவங்களையும் போற்றும் பாரதியார் சரஸ்வதி, லக்ஷ்மி வழிபாட்டையும் அதனால் எமக்குக் கிடைக்கும் இம்மை மறுமைப் பயன்களையும் சுவைபடக் கூறுகின்றார். மாணவர் களுக்கு வேண்டிய கல்வியின் பயனையும் அதனால் ஏற்படும் புண் ணியப் பயனையும் கூறும் இப்பாடல் பாரதியின் கவிதையின் முழு தான நோக்கத்தை நிறைவு செய்கின்றது. நாம் செய்யும் தர்மங்க ளான சோலைகள் அமைத்தல், சுனைகள் அமைத்தல், அன்னசத்திரம் வைத்தல், ஆலயம் அமைத்தல் ஆகியவற்றிலும் பார்க்க ஏழை ஒருவ னுக்கு அதாவது கல்வியறிவில்லாத ஒருவனுக்கு கல்வி புகட்டி எழுத் தறிவித்தலே மேலாய தர்மம் என்பது பாரதி கொள்கை.

''...அன்னயாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்''

என்ற கவிதை இதனை உணர்த்தும் இதனாலேயே

''தேடு கல்வி யிலாத தொரூரைத்
தீயினுக்கிரையாக மடுத்தல்...''

என ஆவேசம் பொங்க உரைக்கின்றார். வழிபாடு என்பது தனியே ஆலயங்களுக்குச் சென்று வழிபடுதலில் மாத்திரமன்றி சமூக நேசிப்பு வழிபாடே பிரதானம் என்பதைப் பாரதியின் பரந்த நோக்கமாகக் கொள்ளலாம். இவரின் கவிதைகள் பலவும் பெண்மைக்கு முக்கியத்து வம் கொடுத்துள்ளது. எல்லாவற்றிலும் மேலாக பாரதி பராசக்தி மீது கொண்ட காதல் அற்புதமானது. தனது அற்புத அனுபவத்தை நாமும் அறியக்கூடிய வகையில் பாரதி கவிதைகள் எமக்கு வழிகாட்டி நிற் கின்றது என்பதில் மிகையுண்டோ?

# அருள் ஒளி தகவல் - களஞ்சியம்

* *திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான மகோற்சவம் 08 - 03 - 2003 ஆரம்பமாகி பங்குனி உத்தரதினமான 18 - 03 - 2003 செவ்வாய்க்கிழமை தீர்த்த உற்சவத்துடன் பூர்த்தி பெறுகின்றது.*
* *வரலாற்றுப் பெருமைமிக்க வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயில் மகாகும்பாபிஷேகம் 21 - 03 - 2003 வெள்ளிக்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற உள்ளது.*
* *மாவை – கொல்லங்கலட்டி திருவருள்மிகு சிதம்பரேஸ்வர சுவாமி திருக்கோவில் மகா கும்பாபிஷேக விழா 19 - 03 - 2003 புதன்கிழமை சிறப்பாக நடைபெற உள்ளது.*
* *ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்தப் பங்குனி பொங்கல் விழா 08 - 04 - 2003 செவ்வாய்க்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற உள்ளது.*

## பஜனையின் தத்துவம்

பஜனை செய்வதன் தத்துவம் என்ன? அதில் நாமே பாடிப் பங்குகொள்ளலாமா? ரேடியோவிலும் ரீவியிலும் பக்திப்பாடல்களைக் கேட்பதால் அதே போன்ற பலன் கிடைக்குமா? இசை என்பது நம்முடைய மனத்தில் உண்டாகும் உணர்ச்சிகளை மென்மையாக வெளிப்படுத்தும் முறையாகும், பெரும்பாலும் நமக்கு உற்சாகம் ஏற்படும் போது அதைப்பாடி வெளிப்படுத்துகிறோம். அது நம்முடைய இதயத்துக்கும் மனத்துக்கும் ஒரு டானிக் போல விளங்குகிறது. நாம் பாடுவது போல் அதுவும் நமக்கும் இசையின் மணத்தை எழுப்பி நம்மை மகிழ்விக்கிறது. மேலும் நாம் வாழும் இந்த உலக வாழ்க்கையின் நிலையிலிருந்து மேலே உயர்ந்த நிலை என்றுக்கு நமது மனத்தை உயர்த்திவிடக்கூடியது.

நாம் பாடினாலும் ஓதினாலும் மெல்ல முணுமுணுத்து இசைத்தாலும் அதன் இனிமையை நாமே நமக்குள் உணர்ந்து அனுபவிக்க வேண்டும். அப்போது அது நம்முடைய வாழ்க்கைக்கே புத்துயிர் அளிப்பதை உணருவோம். அப்படி ஒரு சக்தி இருப்பதால்தான் நாதப்பிரம்மம் என்று சொல்லி தெய்விக சக்தியாகவே அதை வழிபடுகிறோம். இதைப் பிறர் பாடிக் கேட்டாலோ கருவிகள் மூலம் கேட்டாலோ நமக்கு இந்த அனுபம் ஏற்படாது. அதனால் நாமே பாடினால்தான் முழுமையான இன்பம் கிடைக்கும். இதை நாம் தனியாகவும் பாடலாம். நாம் பாடப் பிறர் தொடர்ந்து பாடும் பஜனையிலும் ஈடுபடலாம்.

இதற்கென்று தனியிடம் தேவையில்லை. தனியான நேரம் தேவையில்லை. கூட மற்றவர் இருக்க வேண்டும் என்பது இல்லை. எங்கே வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் பாடலாம். கோயில்தான் என்பது இல்லாமல் வீட்டிலும் பாடலாம். பூஜை அறை மட்டும் இன்றி வேற எங்கும் அமர்ந்து பாடலாம். அப்போது நான் பாடவில்லை என்னுள் இருக்கும் இறைவனே பாட வைக்கிறார் என்று சொல்லிக் கோண்டோமானால் அது நம் உணர்வுகளை உயர்த்தும். நாதப் பிரம்மம் நமக்குள்ளே இருப்பதைப் புரிந்து கொள்ள வைக்கும். இதைக் காட்டிலும் எளிமையான உபாசனை இல்லை.

— சுவாமி நிர்மாலானந்தா

1. வாயைத் திறந்து சப்தம் போட்டு ஜபிக்கும் ஜபம் அதமமானது.
2. உதடு மாத்திரம் அசைந்து கொண்டு ஜபம் செய்வது மத்திமமானது.
3. உதடுகூட அசையாமல் மானசீகமாக ஜபம் செய்வது உத்தமமானது.

சிறுவர் விருந்து

# நெருப்பின் குளிர்ச்சி

மீ. ப. சோமு அவர்கள்

---

சின்னஞ் சிறிய ஒரு தவளைக் குஞ்சு பாசி படிந்த குளத்தின் கரையோரமாகத் தத்தித் தத்தி வந்தது. அங்கே இருந்த ஓர் ஓணானைப் பார்த்துக் கேட்டது!

''அண்ணா, உன் உடம்பில் எத்தனையோ வண்ணங்கள் நெளி கின்றனவே! இத்தனையும் உனக்கு எந்தக் குளத்திலே குளித்து வந்தது? என் உடம்பில் வெறும் பாசிப் பச்சை நிறந்தானே இருக்கிறது!''

ஓணான் சொல்லிற்று,

''தண்ணீரில் குளித்தால் வெறும் பச்சை நிறம் மட்டும்தான் வரும். நீயும் தண்ணீரிலிருந்து வெளியே வந்து என்னைப்போல் வெளிச்சத் திலே குளிக்கப் பழகி விட்டால் எல்லா இடத்தின் நிறங்களும் உன் உடம்பில் ஒட்டிக்கொள்ளும். எனக்கு இந்தப் பஞ்ச வர்ணம் வந்தது அப்படித்தான். இலையிலும் பூவிலும் தாவித் தாவி இப்படி ஆகியிருக் கிறேன்!'' என்றது ஓணான்.

''அப்படியா!'' என்று ஒரே வியப்போடு ஓணானைப் பார்த்தது அந்த அசட்டுத் தவளைக்குஞ்சு.

''நீயும் என்னைப்போல் மரத்திலே தாவி வந்து கிளையிலே ஏறு! ஒரே வர்ணக் களஞ்சியம் ஆகிவிடுவாய்!'' என்றது ஓணான்.

தவளைக் குஞ்சு கரையிலிருந்து எட்டித் தாவிற்று

''அசட்டுத் தவளையே!'' என்று கூப்பிட்டது குளத்தின் கரையிலே புல் மேய்ந்து கொண்டிருந்த ஒரு பசு.

''பசு ஆயாவே! என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டது தவளை.

''அசட்டுத் தவளையே! குளத்துக்குள்ளே தாவிப்போய்த் தப்பித்துக் கொள்! அதோ, புல்தரையிலே பார் நல்ல பாம்பு ஊர்ந்து வருகிறது. மேலே பார், பருந்து வட்டமிடுகிறது. இடத்துக்குத் தகுந்தபடி வண் ணத்தை மாற்றிக் கொள்ளுகிற ஓணானை நம்பாதே! அது பச்சோந்தி நீ அதனிடம் ஏமாந்து போவாய். உயிருக்கு ஆபத்து!''

பாம்புக்கும் பருந்துக்கும் நடுவிலே இப்படி ஒரு பசுவும் குரல் கொடுத் தது! அதே சமயம் என்ன நடந்தது.

கையிலே எடுத்த கல்லைக் கொண்டு குளக்கரையிலே நின்றவாறு ஓணான் அல்லது தவளை என்ற இலக்கிலே குறிவைத்துக் கொண்டிருந்தான் ஒரு விளையாட்டுப் பையன்!

சரலென்று இலைகளோடு இலையாய் மரத்திலேறி மறைந்துகொண்டது ஓணான்! பசுவின் சொல் தவளைக்கு அப்போதுதான் புரிந்தது. உடனே தண்ணீருக்குள் தப்பிப் பாய்ந்தது தவளைக் குஞ்சு! ஓணானைப் போலவே அதுவும் பிழைத்துக் கொண்டது. அந்த விளையாட்டுப் பையன் என்ன ஆனான். நல்ல பாம்பு ஊர்ந்து வருவதைப் பார்த்தும் பதறி அடித்துக்கொண்டு ஓடினான். கல்லை உதறிவிட்டு! அவனும் தப்பித்துக் கொண்டான்.

பசு ஆயா சொல்லிற்று;

''இந்த உலகத்தில் பகையும் எதிர்ப்பும் இருப்பதனால்தான் அன்பும் கருணையும் உயிர் வாழ்கிறது. நாமும் உயிர் வாழ்கிறோம்! இதுதான் இறைவனுடைய திருவிளையாடல்!''

அரசமரக் கிளையிலே உட்கார்ந்து காரமான ஒரு பச்சை மிளகாயைக் கடித்துக்கொண்டிருந்த பச்சைக்கிளி இப்போது இனிப்போடு பாடிற்று :

"தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா — நின்னைத்
தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா"

★ ★ ★


## "அம்மா"

அன்பினில் தெய்வமும் அம்மாவாம்
பண்பினில் தெய்வமும் அம்மாவாம்
பாசத்தினில் தெய்வமும் அம்மாவாம்
கருணையில் தெய்வமும் அம்மாவாம்.

எம்மை வளர்க்கும் தெய்வமும் அம்மாவாம்
எம்மைப் பேணிக்காக்கும் தெய்மும் அம்மாவாம்
எம்மைப் பாலூட்டி வளர்த்த தெய்வமும் அம்மாவாம்
நாம் கண்கண்ட தெய்வமும் அம்மாவாம்.

உள்ளத்தினில் உயர்ந்த அம்மாவாம்
உத்தமர் வாழ்த்தும் அம்மாவாம்
உலகம் போற்றும் அம்மாவாம்
தாய்மையில் சிறந்த அம்மாவாம்.

ஆக்கம் : செல்வி கிருஸ்ணசாமி சுவர்ணா
மானிப்பாய்.



அட்டை பதிப்பு: பிள்ளையார் அச்ச